# தானியேலின் புஸ்தகம்

**முன்னுரை:**

“தானியேல்” புஸ்தகம் ஐந்து பெரிய தீர்க்கதரிசன புஸ்தகங்களில் ஒன்றாகவும், பழைய ஏற்பாட்டின் முக்கியமான புஸ்தகமாக இருக்கிறது. இந்த தானியேல் புஸ்தகத்தை பழைய ஏற்பாட்டின் வெளிப்படுத்தல் புஸ்தகம் என கூறலாம். தீர்க்க தரிசியாகிய தானியேலே இந்த புஸ்தகத்தின் ஆசிரியராக இருக்கிறார் (தானி 8:1; தானி 9:2; தானி 12:4). தானியேல் என்கிற வார்த்தைக்கு “தேவனே நியாதிபதி” என்று பொருள் வருகிறது.

**புஸ்தக பிண்ணனி:**

இந்த புஸ்தகம் இரண்டு பிரிவுடையதாக இருக்கிறது, முதல் பிரிவு (1-6 அதிகாரங்கள்) வரலாற்று குறிப்பாகவும், இரண்டாம் பிரிவு (7-12 அதிகாரங்கள்) தீர்க்கத்தரிசன பகுதியாகவும் உள்ளன.

தெற்கு இராஜ்யமாகிய யூதா தேவனுக்கு விரோதமான செயல்களை செய்ததால் தேவன் அவர்களை பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையில் ஒப்புக்கொடுத்தார் (தானி 1:1,2). நேபுகாத் நேச்சார் யூதர்களை அடிமைப்படுத்தி கொண்டு போவான் என்பதை குறித்து ஏசாயாவும், எரேமியாவும் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். (ஏசா 39:5-8; எரே 20:4). யூதா ஜனங்கள் எழுபது வருடம் பாபிலோனில் அடிமையாக இருப்பார்கள் எனவும் (எரே 25:11,12), எழுபது வருடம் நிறைவேறின பின்பு பாபிலோனின் அடிமைதனத்தில் இருந்து விடுதலை பெற்று, எருசலேமுக்கு திருப்புவார்கள் எனவும் எரேமியா தீர்க்க தரிசனம் உரைத்தார். இந்த தீர்க்கதரிசனம் தானியேலின் புஸ்தகத்தில் நிறைவேறியிருக்கிறது (தானி 1:1-4; தானி 9:1,2).

நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து ராஜகுலத்தை சேர்ந்த (தானி 1:3) நான்கு வாலிபர்களை சிறைப்பிடித்து பாபிலோனுக்கு கொண்டு சென்றான் (கி.மு 605), அந்த நான்கு நபர்களில் ஒருவராக தானியேலும் இருந்தான் (தானி 1:4-6). இந்த நேரத்தில் தாவீதுக்கு வயது 18 -யிலிருந்து 20 வதுக்குள் இருக்கலாம். தானியேலும், மற்ற மூன்று வாலிபர்களும் அந்நிய நாடான பாபிலோனில் தேவனுக்கு பிரியமாக நடந்துக்கொண்டதால் தேவன் அவர்களை அந்நிய நாட்டில் உயர்த்தினார் (தானி 1:8,17-21; தானி 3:30).

தானியேலின் காலத்தில் எரேமியாவும், எசேக்கியேலும் தீர்க்கதரிசனம் உரைத்துகொண்டு இருந்தனர்; எசேக்கியேலும், தானியேலும் ஒருவரை ஒருவர் அறிந்திருக்கலாம்(எசே 14:14,20). தானியேலின் பல தீர்க்கதரிசனங்கள், மேசியாவின் வருகை பற்றியும் மற்றும் அவருடைய ஆளுகை பற்றியும் நமக்கு கூறுகின்றன (தானி

2; 7). தானியேல் புஸ்தகம், பாபிலோனிய பேரரசில் இருந்து ரோமப் பேரரசு, எருசலேமின் அழிவு ஆகியவை வரையிலான வரை குறிப்பை நமக்கு கொடுக்கிறது.

**நோக்கம் மற்றும் மைய கருத்து:**

தானியேல் புஸ்தகம் நமக்கு கூறும் செய்தி தேவன் மனிதர்களுடைய இராஜ்யத்தில் ஆளுகை செய்கிறார் (தானி 4:17), தேவன் தம்முடைய சித்ததின் படி இராஜாக்களை தள்ளி இராஜாக்களை ஏற்படுத்துகிறார் (தானி 2:21). தேவனுடைய இராஜ்யமாகிய சபையானது, பூமிக்குரிய எல்லா இராஜ்யத்தை விட மேலானது என்பதை நமக்கு காண்பிக்கிறது, (தானி 2:44). அந்த இராஜ்யத்தில் இராஜாவாக இருக்கிற மேசியவும், அவருடைய ஆளுகையும் எல்லாவற்றை விட மேலானது என்பதை நமக்கு காண்பிக்கிறது. (தானி 7:13-14, 21; தானி 9:25)

**புறக்குறிப்பு:**

1. நேபுகாத்நேச்சாரின் ஆளுகை (1 அதி -4அதி):
    a. பாபிலோனில் சிறைப்படுதல் (1 அதி)
    b. நேபுகாத்நேச்சரின் கனவும், தானியேல் அதற்கு அர்த்தம் சொல்லுதலும், தானியேல் உயர்த்தபடுதல் (2 அதி)
    c. அக்கினிச்சூளையில் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, அவர்களை தேவன் தப்புவித்தல் (3 அதி)
    d. நேபுகாத்நேச்சரின் இரண்டாம் சொப்பனமும், அவனின் மேட்டிமையும், தேவன் அவனை தள்ளிவிடுதலும், தேவை உணர்த்து அவரை புகழுதலும் (4 அதி)
2. பெல்ஷாத்சாரின் ஆளுகை (6அதி -8அதி):
    a. பெல்ஷாத்சாரின் விருத்தும், ராஜாவை பயப்படுத்திய சுவரில் எழுதப்பட்ட எழுத்துகளும், தானியேல் அதற்கான அர்த்தம் கொடுத்தலும் (5 அதி)
    b. சிங்ககெபியில் தானியேலை போடுதலும், தானியேலின் விசுவாசம், தைரியம் (6 அதி)
    c. தானியேல் கண்ட நான்கு மிருகங்களை பற்றிய தரிசனமும், நீண்ட ஆயுசுள்ளவர் (இயேசு) பற்றி விவரிப்பும் (அதி 7)
    d. தானியேல் கண்ட ஆட்டுகடா மற்றும் வெள்ளாட்டுக்கடா பற்றிய தரிசனம் (மேதியா பெர்சியா மற்றும் கிரேக்கு) (அதி 8)
3. தரியுவின் ஆளுகை (9 அதி):
    a. தானியேல் எருசலேமின் விடுதலைக்காக பிரயாசப்படுதல் (9:1-23)
    b. மேசியா பற்றிய தீர்க்க தரிசனம் (9:23-27)

4. கோரேஸின் ஆளுகை (10அதி -12அதி):
    a. தேவ மகத்துவத்தின் காட்சி (10 அதி)
    b. வடக்கு மற்றும் தெற்கு இராஜ்யங்கள் மற்றும் தேவன் அவருடைய பிள்ளை சுத்திகரித்தல் (11 அதி)
    c. கடைசியான காரியங்கள், ஞானவான்கள் (12 அதி)

**முடிவரை:**

ஒரு கிறிஸ்தவனாக நான் ஏன் தானியேல் புஸ்தகத்தை படிக்க வேண்டும்? என்கிற கேள்விக்கு பதில் தானியேல் புஸ்தகத்தை புரிந்து கொள்வதன் மூலமாய் புதிய ஏற்பாட்டின் வெளிப்படுத்தல் புஸ்தகத்தை புரிந்து கொள்ள முடியும். கிறிஸ்துவை, அவருடைய ஆளுகையும் மற்றும் அவருடை இராஜ்யத்தின் மகத்துவத்தையும் புரிந்துகொள்ள முடியும். தானியேலிடம் இருந்து விசுவாசத்தையும், தைரியத்தையும் தேவனைப் பிரியப்படுத்தலையும் கற்றுக்கொள்ள முடியும்.

## தானியேல் புஸ்தகத்தின் பின்னணி

1. **புத்தகத்தின் ஆசிரியர்:**
    a. "தானியேல்" (தானி 8:1; தானி 9:2; தானி 12:4)
        1. "தானி" +"யேல்" = தேவனே நியாயதிபதி என்று பொருள்
        2. தானியேல் தான் இந்த புஸ்தகத்தின் ஆசிரியர் என்பதை இயேசு கிறிஸ்து நமக்கு நிருபித்திருக்கிறார். (மத் 24:15)
        3. தானியேல் கைதியாக பாபிலோனுக்கு செல்லும் போது அவர் வாலிபனாக இருந்தார். (தானி 1:3,6)
            1. பாபிலோனுக்கு செல்லும் போது அவரது வயது 15-18 க்குள் இருந்திருக்கலாம் (கி.பி 605)
            2. தானியேல் இந்த புத்தகத்தை எழுதி முடிக்கும் போது அவருக்கு வயது தொன்னூறாக (90) இருத்திருக்கலாம்.
            3. தானியேல் கி.மு 606 யிலிருந்து கி.மு 533 வரை நடத்த சம்பவங்களை பதிவு செய்தார். (72-73 வருடங்கள்)
        4. தானியேலை பற்றி இந்த புத்தகத்தின் முதல் அதிகாரத்தில் மூன்றாவது வசனத்தில் ஒரு சிறிய குறிப்பு இருக்கிறது.
            1. தானியேல் ராஜகுலத்தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவன்.
            2. அழகானவன், சகல ஞானத்திலும் தேறினவன், அறிவில் சிறந்தவன், கல்வியில் நிபுணன், அறிவில் சிறந்தவன் ராஜாவின் அரமனையிலே சேவிக்க திறமையுள்ள

வாலுபனாக இருந்தான். (இது தானியேலுக்கும் மட்டும் சொல்லபட்டது அல்ல; தானியேலுடன் நாடு கடந்த பட்ட மற்ற மூன்று வாலிபர்களுக்கும் பொருத்தும்.)

2. **வரலாற்று குறிப்பு:**
   a. அசீரியா, எகிப்து, பாபிலோன் போன்ற ராஜ்யங்கள் அந்த காலத்தில், பேரரசாக இருந்தன.
   b. **அசீரியா:**
      1. அசீரியா அரசர்கள் வரலாற்றில் மூன்று கட்டங்களில் பெரும் நிலப்பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தனர்.
      2. அசீரியா வரலாற்றில் வல்லமையான நாடாக இருந்தது, மெசொப்பொத்தேமியா, பண்டைய எகிப்து, அனத்தோலியாவின் பெரும் பகுதி, பாபிலோன் ஆகியவற்றை கட்டுப்படுத்திய பெரிய பேரரசாக விளங்கியது.
      3. நினிவே (யோனா 1:2) அசீரியாவின் தலைநகரமாக இருந்தது, பல வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி உலக வரலாற்றில் முதல் உண்மையான பேரரசாக அசிரிய மக்களின் புதிய பேரரசு (கி.மு 911-612) விளங்கியது, அசிரியர்கள், முதலில் தந்திரோபாயங்களுடன் போரிட்டதால், அசீரியார்களை போரில் எளிதில் வெல்ல இயலவில்லை.
      4. அசீரியாவினால் இஸ்ரவேல் பிடிக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டது. (2 இராஜா 17:18-24; 2 இராஜா 18:11); எசேக்கியா இராஜாவாக இருந்த போது யூதா தேவனால், அசீரியா ராஜாவின் கைக்கு தப்பியது. ( 2 இராஜா 19:20; 35-27; 2 நாளா 32:21-22)
      5. கி.மு 612 -யில் புது அசிரியப் பேரரசிடமிருந்து நினிவே நகரத்தை கைப்பற்றுவதற்கு நடத்து போர் நினிவே போர் என வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது, பாபிலோனியார்கள், நினிவேயை கைப்பற்றி புது பாபிலோனியப் பேரரசாக எழுச்சியுறந் துவங்கியது, கி.மு 609-யில் அசீரியா வீழ்ச்சி அடைந்தது.




c. **பாபிலோன் பேரரசு:**

1. பண்டைய (ஜலப்பிரளயாத்திற்கு பின்பு) பட்டணங்களில் ஒன்றாக இருந்தது.
2. டைகிரிசு மற்றும் ஐபிரத்து நதிகளில் அருகில் அமைந்திருந்தது.
3. பாபிலோன் என்பதற்கு “கடவுளின் வாசல்” (GATE OF GOD) என்று அர்த்தம் வருகிறது.
4. பாபேல் என்பது பாபிலோனிய நகரத்திற்கு தொடக்கத்தில் கொடுக்கப்பட்ட எபிரெய பெயராகும், இது பாபேல் கோபுரம் இருந்த இடம் (ஆதி 11:9) பாபேல் என்றால் “குழப்பம்” என்று பொருள்.
5. அசீரியா பாபிலோனை கி.மு 689 -யில் வீழ்த்தியது, பின்பு பாபிலோன் கி.மு 627-626 -யில் தன்னுடைய சுதந்திரத்தை பெற்றது பாபிலோன்.
6. அசீரியா பேரரசின் முடிவிலுருந்து பாபிலோன் நகரம் எழுச்சி பெற்றது. (கி.மு 629 – 539)
7. நெபுலேசர் (கி.மு 658- கி.மு 605) இந்த காலகட்டத்தில் ஆட்சி செய்த பாபிலோனியாவின் மன்னன். இவன் பாபிலோனியாவை தலை நகராகக் கொண்டு கி.மு 626 முதல்

கி.மு 605 வரை 20 ஆண்டுகள் ஆட்சி செய்தான், இவன் கி.மு 616 -ல் மெசொப்பொத்தோமியாவை தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான், அவன் மற்ற இராஜ்யகளுடன் இனைந்து அசிரியவுடன் மோதினான், வெற்றிகளை பெற்றான், 605 -யில் இவன் மரித்த பின்பு இவன் மகன் நெபுகாத்நேச்சர் என்கிறவன் இராஜாவாக மாறினான்.

8. நெபுகாத் நேச்சர் (பிறப்பு கி.மு 630 -561), பாபிலோனிய வரலாற்றில் சிறந்த ராஜாவாக இருந்தான்(கி.பி 605-561), பாபிலோனை புதியதாக கட்டினான். அவன் வல்லமை வாய்த்த ராஜாவாக இருந்தான் ( 2 இராஜா 24:7; தானி 2:37,38; எரே 28:14)

9. நேபுகாத்நேச்சர் ராஜாவான போது (கி.மு 605) பாபிலோனை அழகாக மாற்ற பல வேலைகளை செய்தான், பெரிய மதில்களை பட்டணத்தை சுற்றி கட்டினான், சிறந்த வாசல்களை கட்டினான், 43 கோயில்களை கட்டினான், தொங்கும்க தோட்ட்த்தை கட்டினான்.

10. அவன் கையில் தேவன் யூதாவை ஒப்புக்கொடுத்தார்; (2 இராஜா 23:27; 24:1-7); நேபுகாத்நேச்சரின் முதல் முற்றுகையில் தான் தானியேலும் அவனுடன் இன்னும் சில வாலிபர்களும் பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்டன. (தானி 1:1-3)

11. இவனே தேவனுடைய ஆலயத்தையும், எருசலேம் நகரத்தையும், அலங்கத்தை முற்றிலும் அழிந்தான். ( 2 இராஜா 25:7-11).



**யுதா ராஜாக்களும்; அசீரியா, எகிப்து, பாபிலோன் ராஜாக்களும்:**

1. **எசேக்கியா:**

தேவனுடைய பார்வையில் மோசமான இராஜாவாயிருந்த ஆகாஸின் மகனாய் இருந்தான்.( 2 இராஜா 18:1), எசேக்கியா தேவனுடைய பார்வையில் செம்மையானதை செய்தான், தேவனுக்கு பிரியமான காரியங்களை செய்தான் ( 2 இராஜா18:3-7); இருபத்தைந்து வயதில் இராஜாவாக மாறினான், இருபத்தொன்பது வருஷம் அரசாண்டான் (2 இராஜா 18:2), இவன் பேரரசாக இருந்த அசீரியா ராஜாவுக்கு பயப்படாமல், தேவனுடைய வார்த்தையின் படி நடக்க அவனுடைய அதிகாரத்தை தள்ளிவிட்டு, ஜனங்களை தேவனிடத்தில் வழி நடத்தினான், அதினால் அசீரியா இராஜா அவனுக்கு விரோதமாய் வந்தான் ( 2 இராஜா 18:11-37); ஆனால் எசேக்கியா தேவன் மீது கொண்டிருந்த நம்பிக்கை விட்டு பின்வாங்கமல், இருந்தான், தேவன் அவனையும், யூதாவயும் அசீரியா இராஜாவின் கைக்க்கு தப்புவித்தார். (2 நாளா 32:2-22).

பாபிலோன் ராஜாவாயிருந்த பெரோதாக்பலதான், எசேக்கியா வியாதிப்பட்டிருக்கிறதைக் கேட்டு, அவனிடத்தில் நிருபங்களையும், வெகுமானத்தையும் அனுப்பினான், எசேக்கியா அவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு தன்னுடைய எல்லா பொக்கிஷங்களையும் காண்பித்து, மதிக்கேடான காரியத்தை செய்தான், ஏசாயா அவனை எச்சரித்து, நாட்கள் வரும் போது பாபிலோனுக்கு யூதா அடிமையாக போவதை குறித்து முன்பதாகவே கூறினான். ( 2 இராஜா 20:12-21)

2. **மனாசே:**

இவன் எசேக்கியாவின் மகன், 12 ஆவது வயதில் ராஜாவானன்; 55 வருசம் எருசலேமில் அரசாண்டான்; ( 2 இராஜா 21:1); தேவனுடைய பார்வையில் மிகவும் மோசமான இராஜாவாயிருந்தான் ( 2 இராஜா 21:2-7), தேவன் அசீரியர்களின் சேனாதிபதிகளை அவன் மீது வரப்பண்ணினார், அவனை இரண்டு சங்கிலிகளால், கட்டி பாபிலோனுக்கு கொண்டு போனார்கள், மனாசே தேவனை நோக்கி கெஞ்சினான், தேவன் அவனை எருசலேமில் தன் இராஜாத்திற்கு வரப்பண்ணினார் (2 நாளா 33:9-19).

3. **ஆமான்:**

இவன் 22 வயதில் இராஜாவானன், இரண்டு வருடம் அரசாண்டன், தேவனுடைய பார்வையில் பொல்லாப்பை செய்தான், தன் ஊழியக்காரர்களினால் இறத்தான். (2 நாள 33:20-25).

**4. யோசியா:**

எட்டு வயதில் இராஜாவாக மாறினான், 31 வருசம் எருசலேமில் அரசண்டான், தேவனுடைய பார்வையில் செம்மையானதை செய்தான் (2 நாளா 22). காணமல் போன நியாயப்பிரமாண புத்தகம் கிடைத்த போது, அந்த பிரமாணத்தின் படி செய்ய யூதாவை வழி நடத்தினான். (2 இராஜா 22:7-20; 23:1-3,12,21), ஆனாலும் தேவன் கோபமாக இருந்தார், யூதாவை தள்ளிவிட்டார். (2 இராஜா 23:27). எகிப்து ராஜாவின் கையினால் இருந்து போனான் (2 இராஜா 23:29; 2 நாளா 35:19-26)

**5. யோவாகாஸ்:**

இவன் 23 வயதில் இராஜாவாக மாறினான், மூன்று மாதம் அரசாண்டன், கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாதவைகளை செய்தான் ( 2இராஜா 23:31-33), எகிப்தின் இராஜாவான பார்வோன் நேகோ அவனை பிடித்துக்கொண்டான், அவன் எகிப்தில் மரித்தான் ( 2 இராஜா 23:34)

**6. யோயாக்கிம்:**

எகிப்தின் மன்னன், யோவாகாஸை பிடித்த பின்பு, அவனுடைய இடத்தில் அவனுடைய சகோதரனாகிய எலியாக்கீமின் பெயரை யோயாக்கீம் என மாற்றி, அவனை இராஜாவாக வைத்தான், இவன் 25 வயதில் இராஜாவாக மாறினான், 11 வருடம் இராஜாவாக இருந்தான் ( 2இராஜா 23:36), கர்த்தரின் பார்வைக்கு பொல்லத்தவைகளை செய்தான், பாபிலோன் இராஜாவாகிய நெபுகாத்நேச்சர் இவனுடைய ஆளுகையிலே முதலாவது வந்து எருசலேமை முற்றுகைப்பண்ணினான், இந்த நேரத்தில் தான் தானியேல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டார் (2 நாளா 36:4-5; தானி 1:1-3; எரே 27:1-6); எகிப்தின் இராஜாவினால் ஒன்று செய்ய முடியவில்லை, எகிப்தின் ராஜாவுக்கு இருந்த யாவையும் பாபிலோன் ராஜா பிடித்திருத்தான். (2 இராஜா 24:7).

**7. யோயாக்கீன்:**

இவன் ராஜாவாகிற போது பதினெட்டு வயதாயிருந்து, மூன்று மாதம் அரசாண்டான், கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான். பாபிலோன் ராஜா அவனையும், அவன் தாயையும், ராஜாவின் ஸ்திரீகளை, அவன் பிரதானிகளையும், தேசத்தின் பாரக்கிரமசாலிகளையும் சிறைப்பிடித்து கொண்டு போனான், தச்சர்களையும், கொல்லரையும் சிறைப்பிடித்து கொண்டு சென்றான். (2 இராஜா 24:8-16)

## 8. சிதேக்கியா:

சிதேக்கியாவை பாபிலோன் ராஜா, எருசலேமில் ராஜாவாக மாற்றினான், அவன் பெயரை மத்தனியா என்பதிலிருந்து சிதேக்கியா என மாற்றினான், இவன் ராஜாவாக இருபத்தொரு வயதில் மாறினான், பதினொரு வருசம் எருசலேமில் அரசாண்டான், இவன் பாபிலோன் இராஜாவாக விரோதமாக கலகம் பண்ணினான், கர்த்தருடைய பார்வையில் பொல்லாதவைகளை செய்தான், அப்பொழுது, பாபிலோன் ராஜா சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டி, சிதேக்கியாவின் கண்களை குருடாக்கி, அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குகளைப் போட்டு, அவனைப் பாபிலோனுக்கு கொண்டுபோனான், எருசலேமை முழுவதுமாக அழிந்தான். ( 2 இராஜா 24:18-20; 2 இராஜா 25:1-11; 2 நாளா 36:11-22).

# அதிகாரம் ஒன்று

## “பாபிலோனில் சிறைப்படுதல்”

### I. நேபுகாத்நேச்சரின் கையில் தேவன் யூதாவை ஒப்புக்கொடுத்தல்: (1-7)

<u>வாசிக்க வேண்டிய புத்தகம்: ஆபகூக், எரேமியா</u>

1. “யோயாக்கீம்” (வ1) அரசாண்ட மூன்றாம் வருசத்தில் நேபுகாத் நேச்சர் எருசலேமுக்கு வந்து அதை முற்றுகை போட்டான். (எரே 25:1; எரே 46:2) –
    a. எகிப்தின் மன்னன், யோவாகாஸை பிடித்த பின்பு, அவனுடைய இடத்தில் அவனுடைய சகோதரனாகிய எலியாக்கீமின் பெயரை யோயாக்கீம் என மாற்றி, அவனை இராஜாவாக வைத்தான், இவன் 25 வயதில் இராஜாவாக மாறினான், 11 வருடம் இராஜாவாக இருந்தான் ( 2இராஜா 23:36), கர்த்தரின் பார்வைக்கு பொல்லத்தவைகளை செய்தான், பாபிலோன் இராஜாவாகிய நெபுகாத்நேச்சர் இவனுடைய ஆளுகையிலே முதலாவது வந்து எருசலேமை முற்றுகைப்பண்ணினான், இந்த நேரத்தில் தான் தானியேல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டார் (2 நாளா 36:4-5; தானி 1:1-3; எரே 27:1-6); எகிப்தின் இராஜாவினால் ஒன்று செய்ய முடியவில்லை, எகிப்தின் ராஜாவை பாபிலோன் ராஜா முறியடித்தான் (எரே 46:2), எகிப்தின் ராஜாவுக்கு இருந்த யாவையும் பாபிலோன் ராஜா பிடித்திருந்தான். (2 இராஜா 24:7).
    b. எரேமியா சொன்னதைப்போலவே தேவன் யூதாவை அந்நிய இராஜாவின் கையில் ஒப்புக்கொடுத்தார், யூதா தேவனை விட்டு அந்நிய தேவனை பின்பற்றி, தேவனுடைய வார்த்தையை கேளாமல் போனார்கள், தேவன் அவர்களை தள்ளிவிட்டார் (எரே 25:1-11; எரே 20:1-4); இவர்கள் பாபிலோனில் 70 வருடம் அடிமைகளாக இருக்க வேண்டும் எரேமியா தீர்க்கதரிசனம் கூறியிருந்தான் (எரே 25:11)
    c. தேவன் நேபுகாத் நேச்சரை “என் ஊழியக்காரன்” என கூறுகிறார் (எரே 25:9); அதைப்போலவே பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்து, தேவனுடைய ஆலயத்தை கட்ட கட்டளையிட்ட “கோரேஸ்” பிறப்பதற்கு முன்பாக வே தேவன் அவனை தன்னுடைய “மேய்ப்பன்” என கூறுகிறார்(ஏசா 44:28), இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? (தானி 4:17) “உன்னதமானவரே மனுஷருடைய இராஜ்யத்தில் ஆளுகை செய்து” தேவனுடைய ஜனங்கள் தவறு செய்யும் போது தேவன் அவர்களை சரியான பாதையில் கண்டித்து, உணர்த்தி நடத்தவும், அந்நிய ஜனங்களுக்கு முன்பாக தன்னுடைய ஜனங்களை உயர்த்தவும், தன்னுடைய தீர்மானத்தையும், சித்தத்தையும் நிறைவேற்ற

தேவன் அவர்களை பயன்படுத்துகிறார், அந்நிய ராஜாக்கள் தவறு செய்யும் போது தேவன் இவர்களையும் தண்டிக்கிறார்.

2. இராஜா தன்னுடைய பிரதானிகளின் தலைவனுக்கு என்ன கட்டளையிட்டான்? (1:3-6)
    a. இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இருந்து சில வாலிபரை கொண்டு வர
        i. அவர்களின் தகதிகள் (வ 3)
    b. அவர்களுக்கு கல்தேயரின் எழுத்தையும், பாஷையையும் கற்றுக்கொடுக்கவும் (வ 4)
    c. இராஜாவின் போஜனத்தினால் அவர்களை மூன்று வருசம் வளர்க்கவும் (வ 5)
    d. அந்த மூன்று வருசத்தின் பின்பு இராஜாவின் முன்பு நிற்கும் படிக்கும் (வ 5)
        i. மூன்று வருஷம் அவர்களை “வளர்க்க” சொன்ன காரணம்:
            1. அரமனையில் சேவிக்க (வ 3)
            2. ராஜா சில காரியங்களை கேட்டு விசாரிக்க ( வ 20)
            3. தொடர்ப்புக்கொள்ள
            4. குறிப்பு: 3 வருஷம் வளர்க்க வேண்டிய நிலையில் யூதா புத்திரராகிய இந்த நான்னகு வாலிபர்கள் மாத்திரமே இல்லை (தானி 1:6,11,12,19)
3. யூதா புத்திரரில் இருந்து பிடித்து வரப்பட்ட வாலிபர்களும், அவர்களின் பெயரை மாற்றுதலும் (1:6-7)
    a. “யூதா புத்திரர்” (எசேக்கியாவுக்கு ஏசாயா சொன்ன வார்த்தைகளை பார்க்கவும் ( 2 இராஜா 20:18)
        i. தானியேல்
        ii. அனனியா
        iii. மீஷாவேல்
        iv. அசரியா
    b. பிரதானிகளின் தலைவன் இந்த வாலிபர்களின் பெயரை அவர்களின் விக்கிரக்களின் பெயரை குறிக்கும் பெயராக மாற்றினான்; ஏன்? பார்க்கவும் “தானியேல் 4:8” (ஆதி41:45)
        i. தானியேல் – <u>பெல்</u>ஷாத்சார் (எரே 50:2; ஏசா 46:1)
        ii. அனனியா – சாத்<u>ராக்</u>
        iii. மீஷாவேல் – மே<u>ஷாக்</u>
        iv. அசரியா – ஆபேத்<u>நேகோ</u>

**II. தானியேலின் விசுவாசம், சுயகட்டுப்பாடு மற்றும் அந்நிய தேசத்தில் உண்மையாக இருத்தல்: (1:11-24)**

1. தானியேல் இராஜா போஜனத்தையும், பானத்தையும் தள்ள காரணம்: (வ 8)

   a. **“தீட்டுப்படுத்தலாகாதென்று”**
      i. நியாயப்பிரமானத்தின் கட்டளைகளின் படி எல்லா போஜனத்தையும் சாப்பிட கூடாது. (லேவி 11:3-11; எசா 52:11; அப் 10:14)
      ii. விக்கிரகத்தோடு சம்பந்தப்படுத்தப்பட்டதாக, தேவனுக்கு பிரியமில்லாத போதை, மதுபோனம் இருந்திருக்கலாம்.
      iii. தானியேல், மற்றும் அவனுடைய இருந்த மற்ற மூன்று நபர்களும் தேவனுக்கு பயந்தவர்களாகவும், அவருடைய வசனத்தின் படி தங்களுடைய வாழ்க்கையை அமைந்துக்கொள்ள கூடியவர்களாகவும் இருந்தனர், அது எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும், தேவனுக்கு பிரியமானதை செய்ய கூடியவர்களாக இருந்தனர் (சங் 119:104; சங் 119:30,33-35)
      iv. கிறிஸ்தவர்களாகிய நாமும் இதைப்போல செயல்ப்பட வேண்டும் (1 கொரி 2:14)

   b. “இருதயத்தில் தீர்மானம் பண்ணினான்”
      i. எல்லாரும் தானியேலை போல இல்லை ( சக 7:12)
      ii. இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய கேட்க கூடாது என தங்கள் இருதயத்தில் தீர்மானம் பண்ணினார்கள் (எரே 25:5-7; எரே 7:21-23; எரே 9:13,14)

   c. தேவன் ஏன் தானியேலையும், அவனுடன் மற்ற யூத வாலிபர்களையும் சோதனைக்கு அனுமதித்தார்? பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுத்தார்? (ஆபகூ 1:12-13)
      i. தேவன் ஒரு திட்டம் வைத்திருக்கிறார். (ஆபகூ 2:3,4)
      ii. தானியேல் தன்னை நிருபிக்க (1:12-16),
      iii. தானியேலை (தேவனுடைய ஜனங்களை) உயர்த்த (1:20)
      iv. சோதனை என்பது தான் நம்முடைய விசுவாசம் எப்படிப்பட்டது என்பதை காண்பிக்கும் (1 பேது 1:7; யோபு 23:10)
         i. பவுல் எல்லா சூழ்நிலையிலும் தன்னை கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்பதை விளக்கப்பண்ணினார் (2 கொரி 6:3-10; யாக் 1:12)

2. தானியேலுக்கு அவனுடைய மற்ற சகோதர்களுக்கும் பருப்பு, மரக்கறி, குடிக்க தண்ணீரை கொடுத்து சோதித்து பார்த்தல்: (1:11-21)
    a. தேவனுடைய வார்த்தையின் படி நடப்பதால், நாம் எந்த விஷயத்திலும் மற்றவர்களைவிட குறைந்து விட மாட்டோம் (1:11-14)
        i. தேவன் தானியேலையும், அவனுடன் மற்ற மூன்று சகோதரர்களையும் உயர்த்துதல் (1:17-21)
            1. மற்ற வாலிபர்களை பார்க்கிலும், அந்த இராஜ்யத்தில் இருக்கிற மற்ற எல்லா நபர்களை பார்க்கிலும், பத்து மடங்கு ராஜா இந்த நான்கு நபர்களை சமர்த்தராகக் கண்டான் ( வ 20).

# அதிகாரம் இரண்டு

# தேவனுடைய இராஜ்யம்

வாசிக்கவேண்டிய சில பகுதிகள்: லூக்கா 1:32-33; சக 6:12,13; 2 சாமு 7:12,13; ஏசாயா 2:2-7

I. நேபுகாத்நேச்சர் கனவும், அதற்கான அந்த கனவையும், அதின் அர்த்தத்தை ராஜா கேட்டல் (2:1-13)

அ. "நேபுகாத் நேச்சார் ராஜ்யபாரம் பண்ணும் இரண்டாம் வருஷத்திலே" (வ 1)

1. இந்த சம்பவம் மூன்று வருட பயிற்சியின் காலத்திலோ (1:5); அந்த பயிற்சியின் முடிவிலோ (2:13) நடத்திருக்கலாம் (2:25,26)
2. இந்த காலக்கட்டத்தில் தானியேல் பிரபலமான நபராக இல்லை (1:20; 2:25,26)

ஆ. சொப்பனங்களினால் அவன் ஆவி கலங்கி (வ 1)- தேவன் சொப்பனங்களின் மூலம் தன்னுடைய திட்டங்களை வெளிப்படுத்தியிருக்கிறார் (ஆதி 41:25; ஆதி 28:12), எச்சரித்திருக்கிறார் (ஆதி 40:3), புதிய ஏற்ப்பாட்டின் காலத்தில் (இன்று) தேவன் தனி நபர்களின் சொப்பனங்களின் மூலமாய் பேசுவதில்லை; நாம் இன்று என்ன செய்ய வேண்டும் என்கிற திட்டத்தை அவருடைய முழுமையான ஆவியின் பிரனமாகிய புதிய ஏற்பாடு கொடுத்திருக்கிறது (எபி 1:1,2; எபே 3:3-6; யாக் 1:25; யாக் 2:12). சொப்பனத்தின் மூலமாய் தேவன் தன்னுடைய திட்டத்தை நெபுகாத் நேச்சருக்கு வெளிப்படுத்தினார் ( 2:45)

இ. சொப்பனத்தையும், அதின் அர்த்ததையும் தனக்கு அறிவிக்கும் படி சில நபர்களை ராஜா அழைத்தல் ( 2:2-4)

1. சாஸ்திரிகள், ஜோசியர், சூனியக்காரர், கல்தேயர்கள் போன்ற நபர்கள்
    a. இப்படிப்பட்ட வேலைகளை தேவன் வெறுத்தார் (உபா 18:10-12)
    b. விலக்குகளின் ஈரலினால் குறி பார்க்கிறவர்கள் இருந்தார் (எசே 21:21)
    c. நடசத்திரங்களை பார்க்கிறவர்கள் (ஏசா 47:12-13)
    d. தேவனுடைய திட்டத்திற்கு, அவருடைய பிள்ளைகளுக்கும் எதிராக செய்ல்பட கூடியவர்களாக இருக்கிறார்கள் (அப் 19:13-20; அப் 16:16-19; அப் 13:6-10; எரே 28:1-6)
    e. தேவனே பெரியவர், தேவனுக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் முன்பாக இவர்கள் ஒன்றும் இல்லை, இவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. (யாத் 7:9-12; 1 கொரி 3:19-20; அப் 13:6-11)

ஈ. சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லும் படி ராஜாவினிடத்திலிருந்து பிறந்த தீர்மானம் ( 2:5-14)

1. ராஜாவின் தீர்மானம்:
    a. சொப்பனத்தையும், அதின அர்த்தத்தையும் சொல்ல வேண்டும் (வ 5)
    b. அப்படி சொல்லாதவர்கள் துண்டித்து போடப்படுவார்கள்; அவர்களுடைய வீடுகள் "எருக்களங்காளக்கப்படும்"
        i. எருக்களங்காளாக்கப்படும்" – குப்பை மேடு (எஸ் 6:11) dunghill – சாணப் ( 2 இராஜா 10:27)
    c. சொப்பனத்தையும், அர்த்தத்தையும் தெரிவித்தவர்களுக்கு வெகுமதிகளையும், பரிசுகளையும், மிகுந்த கனத்தையும் பெறுவார்கள் (வ 6)
2. ராஜாவின் புத்திசாலித்தனம் (2:7-14)
    a. ஆராய்த்து அறிந்துக்கொள்ளுதல் முக்கியம் (லூக் 1:3; 1 பேது 1:9-11)
    b. அறிவில்லாத வைராக்கியமுடையவர்களாய் இருக்க கூடாது ( ரோம 10:2,3)
3. ராஜாவின் மகா உக்கிரமான கோபம் ( வ12,13)
    a. இரக்கமற்றவனாய் இருத்தான் (2 இராஜா 25:6-11)

II.தானியேல் சொப்பனத்தையும், அதின் அரத்ததையும் சொல்லுதல் (2:14-45)

அ, தானியேலும்ர ஆரியோக்கும் (2:14-16)

1. ஆரியோக்:
    a. ராஜாவின் கட்டளையை நிறைவேற்ற புறப்பட்டான் (வ 14)
    b. தானியேல் ராஜாவினிடம் தவனை கேட்டல் (வ 15-16)
    c. தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு அதிகாரிகளின் கண்களின் தயவை ஏற்ப்படுத்துகிறார் (வ 14; 1:9; நெகே 2:8; எஸ்த 2:9)

ஆ. தானியேல் தனக்காகவும், தன்னுடைய தோழர்களுக்காகவும் தப்பித்துக்கொள்ள அந்த மறை பொருளை தேவனிடம் கேட்டுப்பெற்றுக்கொள்ளுதல் (2:17-23)

1. தானியேலையும், அவனின் தோழர்களையும் அழிக்க முயற்சித்தல் (வ 13)
2. தானியேலுக்கு தேவன் மறைப்பொருளை வெளிப்படுத்தலும், தேவனை புகழுதலும் ( வ 18-23)

இ. தானியேல் ராஜாவினிடத்தில் சொப்பனத்தை சொல்லுதல் (2:24-36)

1. தானியேலின் தாழ்மை (2:26-28)
    a. தன்னை குறித்து சரியான மனப்பான்மை (வ 30, ரோம 12:3; கலா 6:3)
2. மறைப்பொருள்களை வெளிப்படுத்துகிறவர் ( 2:22,28)
    a. “இரகசியம்”
        i. தேவனே இரகசியத்தை வெளிப்படுத்துகிறவர் ( 1 கொரி 2:7-13; எபே 3:3-6; 1 பேது 1:12)
    b. இந்த சொப்பனம் இனிமேல் சம்பவிக்க போகிறதையும் (வ 29); கடைசிநாட்களில் சம்பவிப்பதை (வ 28; அப் 2:17; 1 பேது 1:20) சொல்லகூடியதாக இருந்தது
        i. “கடைசி நாட்கள்”
            1. கடைசி காலங்களில் இயேசு வெளிப்பட்டார் ( 1 பேது 1:20; எபி 1:2)
            2. நாம் உலகத்தின் முடிவுகாலத்தில் இருக்கிறோம் (1 கொரி 10:11)
            3. கனைசி நாட்களில் சபை உருவாக்கப்பட்டது (அப் 2:16,17; அப் 2: 42,47)
            4. கிறிஸ்துவின் காலத்திற்கு பின்பு இன்னொரு காலம் இல்லை.
3. சொப்பனம் (2:31-35)
    a. பெரிய சிலை, மிகுந்த பிரகாசமுள்ளதும், ரூபம் பயங்கரமாயிருந்தது (வ 31)
    b. சிலையின் தலை பசும் பொன் ( வ32)
    c. மார்பு, புயங்கள், வெள்ளி (வ 32)
    d. அதின் கால் இரும்பும், பாதம் பாதி இரும்பும் பாதி களி மண் (வ 33)
    e. கல், கைகளால் பெயர்க்கப்படாததது, உருண்டு வந்தது, சிலையை மோதியது, இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதியது (வ 33,34)
    f. அந்த சிலை நொறுக்கி போயிற்று, சிலையை மோதின கல் பெரிய பர்வதமாகி பூமியெல்லாம் நிரப்பிற்று (வ 34,35)
4. சொப்பனத்தின் அர்த்தம் ( 2:36-45)
    a. “பரலோகத்தின் தேவன்” (வ 37)

i. நெபுகாத் நேச்சர் முன்பு தேவனை அடையாளப்படுத்துவம் போது அவர் பரலோகத்திலுக்கிறவர் என தானியேல் கூறுகிறார்(2:28,37,44)
    1. பார்க்கவும்: சங்கீதம் 115:3-8
    2. உண்மையான தேவனை இது காண்பிக்கிறது (2:47)
    3. தேவன் அருளினார் (தானி 4:17; எரே 28:14)

b. சிலையின் தலை – பாபிலோன் இராஜ்யம் (வ 38)
   i. பொன்னான அந்த தலை நீரே (ஏசா 14:4)
   ii. கீ.மு 606 -536

c. மார்பும், அதின் புயங்களும்- மேதிய பெர்சியா இராஜ்யம்
   i. உமக்கு கீழ்த்தரமான இராஜ்யம் தோன்றும் (தானி 5:28,30,31)
   ii. கீ.மு 536-330

d. வயிறும், தொடையும் – கிரேக்கம் (வ 39)
   i. பூமியெல்லாம் ஆண்டுக்கொள்ளம் ராஜ்யம் (தானி 8:7,8; தானி 8:20,21)
   ii. கி.மு 330-63

e. பாதங்கள் கால்விரல்கள்- ரோம இராஜ்யம் (வ 41-43)
   i. கி.மு 63 – கி.பி 476

f. கைகளால் பெயர்க்கப்படாத கல் – தேவனுடைய இராஜ்யம் ( வ44)
   i. இது ரோம ராஜ்யத்தின் காலகட்டத்தில் தேவனால் கட்டப்பட்டது ( வ34)
   ii. கல் – ஏசா 2:2; 1பேது 2த4-5)
   iii. கைகளால் பெயர்க்கப்படாத – சபை மனிதனினால் கட்டப்பட்டது அல்ல (மத் 16:18; சக 6:12,13), இது இயேசுவால் கட்டப்பட்டது
   iv. “ஒரு இராஜ்யம் – சபை (மத் 16:18,19; மாற் 9:1; யோவா 18:36; எபி 12:28; கொலே 1:13)
   v. இந்த ராஜ்யத்திற்கு அழிவு இல்லை; நித்தியமானது (மத் 16:18; எபி 12:28; லூக் 1:33)
   vi. இது மற்று ராஜ்யங்களை நிர்மூலமாக்கும்

g. இவைகள் சத்தியம் (வ 45; 2 பேது 1:19)

5. தானியேலை ராஜா உயர்த்துதல் (2:46-49)
   a. இராஜா பரலோகத்தின் தேவனை பாராட்டுதல் (வ 47)
   b. தானியேலையும், அவன் தோழர்களையும் உயர்த்துதல் ( வ48,49)

# அதிகாரம் மூன்று

# தேவனே தப்புவிக்கிறவர்

வாசிக்க வேண்டிய பகுதிகள்: எரேமியா 21; ஏசாயா 43:2; சங்கீதம் 66:6-12; சங்கீதம் 34:4-9

**I. நேபுகாத்நேச்சாரின் பொற்சிலை (3:1-7)**

அ. ஏன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சர் “பொற்சிலையை” பண்ணினான்? (வ 1)

1. தானியேல் சொன்ன சொப்பனத்தின் அர்த்தத்தில் அந்த “பொன்னான தலை நீரே” ( 2:38) என்று இருந்ததால், ஒருவேளை அவன் அதை போல் ஒரு சிலையை செய்திருக்கலாம்.
2. எல்லா தேவர்களை விட நான் பெரியவன் என்பதை காண்பிப்பதற்காக இருக்கலாம் (3:15)
    a. ராஜாவின் கட்டளை பெரியது என்பதை காண்பிப்பதற்காக இருக்கலாம் ( 3:11,12)
3. பாபிலோனின் வல்லமை காண்பிப்பதற்காக இருத்திருக்கலாம் (ஏசா 13:19; ஏசா 14:4)
    a. சிலையை பண்ணின அந்த “பொன்” தேவனுடைய ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்டதாக இருக்கலாம். (2 இராஜா 24:13; 2 இராஜா 25:13,15)
4. அந்த சிலையை “தூரா” என்னும் சம்பூமியில் நிறுத்தினான் (வ 1)
    a. இந்த இடம் பாபிலோனில் இருந்து ஆறு மைல் தூரம் இருந்திருக்கலாம்.
5. ராஜாவின் தேவர்களை தான் எல்லாரும் ஆராதிக்க வேண்டும் (3:12,18) என்பதற்காகவும்.
6. இந்த நேரத்தில் தானியேல் எங்கே?
    a. இந்த சம்பவங்கள் எல்லாம் தானியேல் ராஜாவின் சொப்பனத்திற்கு அர்த்தம் கூறியதற்கு பின்பு நடத்தவை (3:12 = 2:49)
    b. தானியேல் இந்த சம்பவங்கள் நடக்கும் போது “தூரா”வில் இல்லை; அவர் ஏதாவது வேலையின் காரணமாக அங்கே இல்லாமல் இருத்திருக்கலாம். ( 2:48; 8:27)

ஆ. சிலைக்கான பிரதிஷ்டையும், அதற்கான அழைப்பும் (3:2-7)

1. கீத வாத்தியங்களின் சத்தத்தை கேட்கும் போது எல்லாரும் தாழ விழுந்து, சிலை பணிந்து கொள்ள வேண்டும் ( வ 5)

2. அப்படி பணிந்து கொள்ள வில்லை என்றால் அவர்கள் எரிகிற அக்கினிச் சூளையின் நடுவில் போடப்படுவார்கள் ( வ 6)

**II. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ராஜாவின் கட்டளை தள்ளிவிடுதல், கீழ்ப்படிய வில்லை (3:8-18)**

அ. சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோவின் மீது கல்தேயரில் சிலர் குற்றச்சாற்றுதல் (வ 8- 12)

1. காரணம்: அவர்களின் மீது கல்தேயர்களுக்கு இருந்த பொறாமை (வ 8, 6:4)
    a. தேவனுடை பிள்ளைகளின் மீது மற்றவர்கள் பொறாமைப்படுகிறார்கள் (சங் 106:16; மத் 27:14-17; 1 பேது 4:2-4).
    b. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் பொல்லாதவர்களின் வாழ்கையின் மீதும், அவர்களின் மீதும் பொறாமை கொள்ள கூடாது. (நீதி 3:31; கொலோ 2:20,21; கொலோ 3:1,2)

ஆ. ராஜா சாத்ராக், மேஷாக் ஆபேத் நேகோவை அழைத்து வர சொல்லுதல் ( வ 13,14)

இ. ராஜா சாத்ராக், மேஷாக் , ஆபேத் நேகோவிடம் விசாரித்தல், இந்த மூன்று நபர்களின் விசுவாசமும். ( வ 3:14 – 18)

1. “மெய்தானா” (வ 14) – ராஜா இவர்களுக்கு இன்னொரு வாய்ப்பு கொடுக்கிறதைப்போல இருக்கிறது ( வ 15)
2. “உங்களை என் கைக்கு தப்புவிக்கப்போகிற தேவன் யார்” (வ 15)
    a. தானியேலின் தேவனே “மெய்யாக தேவர்களின் தேவன்” என நேபுகாத் நேச்சர், தானியேல் சொப்பனத்தின் அர்த்ததை சொல்லி முடித்த போது கூறினான் (தானி 2:47), ஆனால் இப்பொழுது அவன் அந்த வல்லமையான தேவனை மறந்து விட்டான்.
        i. தேவனை மறப்பது மிகவும் மோசமான காரியம் ( உபா 8:11-16; சங் 103:1-3)
            1. மேட்டிமை மறக்க செய்கிறது (ஓசியா 13:6).
    b. நேபுகாத் நேச்சர் அநேக தேவர்களை வணங்கினான் (3:18); இவன் இராஜாவாகும் போது ஏறக்குறைய 40 கோயில்களை கட்டினான். (எரே 50:1,2; எரே 51:7)
    c. ராஜா தன்னை தேவர்களுக்கு மேலாக கொண்டு சென்றான். (எசே 28:2,3)
        i. அகங்காரமாய் இருந்தான் (மல் 3:13-15; ஆப 2:3,4)

3. “நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன்... தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்” (வ 17,18)
    a. இதன் மூலமாய் இவர்களின் விசுவாசம் நமக்கு தெரிகிறது. நேபுகாத் நேச்சரின் கேள்விக்கு சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ பதில் கூறியிருக்கிறார்கள் (வ 15), எங்கள் தேவனே, நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களை தப்புவிக்க வல்லவர் என கூறினார்கள்.
    b. “தேவன் தப்புவிக்கிறவர்” என்பதை இவர்களுக்கு எப்படி தெரியும்? இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய மகத்துவத்தையும், பலத்தையும் அவர் செய்த அதிசயங்களையும் தங்களுடைய பிள்ளைகளுக்கு அறிவித்திருத்தனர் (சங் 78:3-8; நியா 6:13). தேவனை அறிந்து கொள்ள நியாயப்பிரமாணமிருந்தது, பழைய ஏற்பாட்டின் சில புஸ்தகங்கள் இருத்தது, இதின் மூலமாய் தேவனுடை மகத்துவத்தையும், பலத்தையும், வல்லமையும் இவர்கள் தெரிந்திருக்கலாம்.
    c. உண்மையாகவே தேவன் தப்புவிக்கிறவர் என்பதை இந்த மூன்று நபர்களும் அறிந்திருத்தனர், விசுவாசித்தனர், தேவனால் முடியாத காரியம் ஒன்றுமில்லை (மத் 19:26), இதே விசுவாசமும், அறிவும் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வாழ்க்கையில் தேவைப்படுகிறது (எபே 3:20; 1 யோவா 4:4).
        i. நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையை நாம் அறித்திருப்பதோடு அதை விசிவாசிக்க வேண்டும் (ரோம 4:21-25)
4. “பணிந்துக்கொள்வதுமில்லை.... உமக்கு தெரிந்திருக்கடவது” (வ 18)
    a. இவர்கள் நியாயப்பிரமாணத்தின் படி நடத்ததால், ராஜாவின் போஜனத்தை சாப்பிட மறுத்தார்கள் ( 1:8; லேவி 11:3-10), விக்கிரகராதனை செய்ய மறுத்தார்கள் (யாத் 20:4-6)
    b. இவர்களின் விசுவாச உறுதி நமக்கான பாடம், நாமும் இப்படியே , இருக்க வேண்டும் (பிலி 1:27; கொலோ 2:5-7; யுதா 20; எபி 3:14; 2 பேது 3:17)

**III. இராஜாவின் கடுங்கோபம், தேவன் இவர்களை தப்புவித்தல், ராஜாவ இவர்களை உயர்த்துதல் (3:19-30)**

அ. இராஜாவின் கடுங்கோபம் ( வ19 -23)

1. அக்கினி சூளையை ஏழு மடங்கு அதிகமாக்குதல் (வ 19)
2. அக்கினி சூளையின் நடுவில் கட்டப்பட்டு போடப்படுதல் (வ 21)

3. இவர்களை அக்கினிச் ஜூவளையில் நடுவில் போட கொண்டுபோன புருஷர்கள், அக்கினி ஜூவாளையினால் இறந்தார்கள் (வ 22)

ஆ. தேவன் இவர்களை தப்புவித்தல் ( வ 24-27)

1. இராஜா அக்கினியின் நடுவில் நாலாவது ஆளைப்பார்த்தல்; அந்த நபர் ராஜாவின் பார்வைக்கு தேவ புத்திரனுக்கு ஒப்பாக இருந்தது. (வ 23-25)
    a. இயேசுவாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.
2. உண்மையாக தேவன் இவர்களை தப்புவித்துவிட்டார் (வ 27; சங் 34:7)
    a. அந்த புருஷருடைய சரீரங்களில் மேல் அக்கினி பெலஞ் செய்யவில்லை (எபி 11:34)
    b. இப்பொழுது வெட்கப்பட்டது யார்? ராஜாவா? தேவனை விசுவாசித்தவர்களா?
        i. இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் வெட்கப்பட்டுப்போவதில்லை (ரோம 5:5; 1 பேது 2:6)

இ. இராஜா தேவனை மகிமைப்படுத்துவதும் இந்த மூன்று நபர்களை உயர்த்துதலும் (வ 28 - 30)

1. “அவரை நம்பி, ஒப்புக்கொடுத்தார்கள்” (வ 28) - இவர்களின் விசுவாசம் (ரோம 12:1)
2. ராஜாவின் கட்டளை (வ 29)
    a. தேவனை தூஷிக்கிரவன் வீடு “எருக்களமாக்கப்படும்” ( வ 29; 2:5; எஸ் 6:11; 2 இராஜா 10:27)
3. இராஜா உண்மையான தேவனை அறிந்துக்கொண்டான் (வ 29)

# அதிகாரம் நான்கு

## “தேவனே மனுசருடைய இராஜ்யத்தில் ஆளுகை செய்கிறவர்”

வாசிக்க வேண்டிய பகுதிகள்: தானியேல் 2:17; 1 சாமு 2:8; லூக் 1:52; யோபு 36:7; வெளி 1:5

### I. நேபுகாத்நேச்சாரின் வார்த்தைகள் ( 4:1-3)

அ. “பூமி எங்கும் குடியிருக்கிற” (வ 1)

1. நெபுகாத்நேச்சர் ஆசியாவின் பெரும் பகுதியை ஆளுகை செய்தான், அவன் இராஜ்யம் பெரியதாக வளர்த்திருந்தது ( 2:37,38), தேவனே இதையெல்லாம் அவன் கையில் கொடுத்திருந்தார் (எரே 32:2, எரே 25:9)
2. ராஜா தேவனை மகிமைப்படுத்தல் (4:2)
    a. தேவன் செய்த அடையாளங்களையும், அற்புதங்களை பிரசிப்படுத்துவது நோக்கமாக இருக்கிறது.

### II. நேபுகாத்நேச்சரின் சொப்பனம், தானியேல் அதற்கான அர்த்தம் சொல்லுதல்: (4:4-27)

அ. இந்த சொப்பனத்தை காணும் போது இராஜா எங்கேயிருந்தான்?(வ 4)

1. “வீட்டிலே சவுக்கியமுள்ளவனாயிருந்தான்” -இளைப்பாறுதல், மகிழ்ச்சியாயிருப்பது, இராஜாவின் நிறைவான காலகட்டங்களாக இருக்கலாம்.
2. “அரமனையிலே வாழ்ந்து கொண்டிருந்தான்” – போர் இல்லை, இராஜ்யங்கள் பிடிக்கிறது இல்லை.

ஆ. சொப்பனத்தை கண்டேன் (வ 6) – இது இரண்டாம் சொப்பனம், முதலாம் சொப்பணம் இராஜ்யங்களை பற்றியது ( 2 அதி)

1. சொப்பனத்தின் அர்த்தத்தை சொல்ல பாபிலோன் ஞானிகளையெல்லாம் வர கட்டளையிடுதல் (வ 6)
    a. இராஜா சொப்பனத்தை சொல்லியும், அதின் அர்த்தத்தை யாராலும் சொல்லமுடியவில்லை (வ 7)
    b. முதல் சொப்பனத்தை கண்ட போது அந்த சொப்பனத்தையும், அதின் அர்த்ததையும் சொல்ல வேண்டும் என கட்டளையிட்டிருந்தான். (2:4-9), ஆனால் இந்த முறை இராஜா அந்த சொப்பனத்தை அவனே சொல்லிவிட்டான், அவனுடைய மனப்பான்மையில் மாற்றம் ஏற்ப்பட்டுள்ளது.

2. அர்த்தத்தை சொல்ல தானியேல் கொண்டு வரப்படுதல் ( வ8,9)
    a. இந்த காலகட்டத்தில் தானியேல் அதிபதியாக இருந்தான் (வ 9)

இ. இராஜாவின் சொப்பனம் (வ 10-18)

1. தேசத்தின் மத்தியில் மிகவும் உயரமான விருட்சத்தை கண்டேன் (வ 10)
    a. விருட்சம் = மரம்
    b. வளர்ந்து, பலத்து தேசத்தின் எல்லை பரியந்தம் காணப்பட்டது (வ 11)
    c. அதின் உயரம் வானபரியந்தம் எட்டினது (வ 11)
    d. அதின் இலைகள் நேர்த்தியும், அதின் கனி மிகுதியுமாயிருந்தது ( வ12)
    e. எல்லா ஜீவனுக்கும் அதில் ஆகாரம் உண்டாயிருந்தது (வ 12)
    f. மிருகங்கள் நிழலுக்கு ஒதுங்கினது, கொப்புகளில் ஆகாயத்துப் பட்சிகள் தாபரித்துச் சகல பிராணிகளும் அதினால் போஷிக்கப்பட்டது.
2. “காவலானாகிய பரிசுத்தவான் ஒருவன் வானத்திலிருந்து இறங்கக்கண்டேன் (வ13)
    a. இது தேவ தூதனை குறிக்கிறது ( எபி 1:14)
    b. விருட்சத்தை வெட்டி, கொப்புகளை தறித்து போட்டு, இலைகளை உதிர்த்து, கனிகளைச் சிதறிடிக்க சொல்லுதல் (வ 14)
    c. வேரை பூமியில் விட்டுவிட சொல்லுதல் (வ 15)
    d. தூதன் ஒருவனை பற்றி கூறுதல்; அவனுக்கு மனுஷ இருதயமாயிரமல், மிருக இருதயம் கொடுக்கப்படும், இப்படி அவன் மேல் ஏழு காலங்கள் கடந்து போக வேண்டும் (வ 15,16)
    e. உன்னதமானவரின் சித்தம் (வ 17)

ஈ. தானியேல் அர்த்தம் சொல்லுதல் ( வ19-28)

1. தானியேல் “ஒரு நாழிகை” = ஒரு மணி நேரம்” திகைத்து, சிந்தித்து கலங்கினான். ஏன் ? (வ 19)
2. பரந்து, விரிந்த அந்த உயரமான மரம் இராஜாவாகிய நேபுகாத் நேச்சார் (வ 22)
    a. தேவனே நேபுகாத்நேச்சரை பெரிய மரமாக மாற்றானார் (4:17; 2:37,38; எரே 27:6-8)
    b. அந்த மரத்தை அழிக்க சொல்லுதல் ( வ23)
        i. இராஜா மனுசரின்று தள்ளிவிடப்பட்டு, வெளியின் மிருகங்களைப்போல சஞ்சரிப்பான் (வ 24)

3. தேவனே மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்கிறார் என்பதை அறிந்துக்கொள்ள வேண்டும் (வ 25)
    a. ஏழு காலங்கள் கடந்து போக வேண்டும் – ஒரு வேளை அடையாள குறிப்பாக இருக்கலாம் (simpalic) – "முழுமை" "பூரணம்" – அறிந்துக்கொள்ளும், உணரும் வரை (4:34-36)
    b. அடிமரம் தரையில் இருக்கட்டும்" – பின்பு கொஞ்ச காலம் இராஜ்யம் நிலைத்திருக்கும் ( வ 26 = 36)
4. தானியேலின் ஆலோசனை (வ 27)
    a. மனந்திரும்ப புத்திமதி
    b. நீதியை செய்தல் (அப் 10:35; அப் 8:22; வெளி 2:5)

**III.சொப்பனத்தின் படியே ராஜாவிற்கு நடந்துது, ராஜா உணர்வடைதலும், தேவனை மகிமைப்படுத்தலும் (4:29-37)**

அ. இராஜா தள்ளப்படுதல் ( வ29-33)

1. மாக பாபிலோன் ( வ 30; ஏசா 13:19; ஏசா 14:4; ஏசா 47:5)
    a. பாபிலோன் சிறப்பான, அலங்காரமான வல்லமையைஆன இராஜயமாக இருந்தது, நெபுகாத்நேச்சர் கட்டிடங்களை கட்டினான்; பிரம்பாண்டமான மதில்களை கட்டினான்; தொங்கும் தோட்டத்தை கட்டினான், ஆனால் இது எல்லாம் தன்னால் தான் ஆனாது என கூறினான்; தேவனை அவன் நினைக்க வில்லை. தனக்கு வல்லமையையும், வாய்ப்பையும் கொடுத்த பரலோகத்தின் தேவனை மறந்து விட்டான் (தானி 2:37,38; பிர 9:11), தேவன் கொடுத்த தரிசனத்தை பன்னிரண்டு மாதத்தில் மறத்துவிட்டான்.
2. "நான் கட்டின" (வ 30) – மேட்டிமை; தேவனுக்கான மகிமை எங்கே ? (எரே 9:23,24; சங் 44:6-8; சங் 20:7,8; யாக் 4:6; நீதி 16:5); நமக்கான எச்சரிப்பு (கலா 6:3,14; ரோம 11:20,21; பிலி 2:3)
3. ராஜா தள்ளப்படுதல் (வ 32,33)
    a. தேவன் தனக்கு சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக்கொடுக்கிறார்" ( வ32)
    b. தேவன் தாழ்மையானவர்களை உயர்த்துகிறார் (சங் 78:70-72; அப் 13:22; லூக் 1:52; 1 சாமு 2:8)
    c. அவருடைய வார்த்தைக்கு பயப்படுகிறவனை நோக்கி பார்க்கிறார் (ஏசா 66:2; யோவா 9:31)

4. ராஜா தேவனுடைய வல்லமையையும்ர அறிந்துக்கொள்ளுதல், உணர்ந்துக்கொள்ளுதல் (4:34-37)
    a. அந்த நாட்கள் = 7 காலங்கள் !
    b. தேவனை புகழுதல் (வ34)
        i. தேவன் அவருடைய சித்ததின்படி நடத்துகிறார் ( வ 35; எரே 10:23)
        ii. அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை ( வ 35; அப் 5:39; அப் 11:17; ரோம 9:15-22; ரோம 11:33-35)
            1. நாம் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்படிய வேண்டுமே அல்லாமல் அதற்கு எதிர்த்து நிற்க கூடாது.
            2. நாம் தேவனோடு எதிர்த்து நிற்க முடியாது; நாம் வெறும் மண்னே
    c. ராஜா மனநிலை பாதிப்படைத்திருக்கலாம், மிருகத்தை போல மாற்றப்பட்டான் (வ 36)
        i. அவனின் புத்தி அவனுக்கு வந்தது, மாடுப்போல இல்லாமல் மாறினான்
        ii. ராஜ்யத்திலே ஸ்திரப்படுத்தப்பட்டான் (வ 36 = 26)
    d. தேவனை புகழுதல் ( வ37)
        i. தேவனை பரலோகத்தின் ராஜா என குறிப்பிடுகிறான்
        ii. அகந்தையாய் நடக்கிறவர்களை தாழ்ந்த அவரால் ஆகும்
        iii. “என்று எழுதினான்” – இரண்டாவது நபர் பேசுகிறார், தானியேல் (4:1)

# அதிகாரம் 5

## "தேவனே ராஜாக்களை தள்ளி, ராஜாக்களை ஏற்ப்படுத்துகிறவர்"

வாசிக்க வேண்டிய பகுதிகள்: எரேமியா 51; எசா 13-14; எசா 45

### I. பெல்ஷாத்சார் தேவனை அசட்டைப்பண்ணப்படுதல் (5:1-4)

அ. யார் இந்த "பெல்ஷாத்சார்" (வ 1)? நெபுகாத்நேச்சரின் மரணத்திற்கு பிறகு அவனுடைய சந்ததியில் வந்தவனாய் இவன் இருந்தான் (தானி 5:18). பெல்ஷாத்சாரின் தாய் நெபுகாத்நேச்சரின் மகளாக இருந்தாள்; பெல்ஷாத்சார் நெபுகாத்நேச்சரின் பேரனாக இருந்தான். இவனுடைய ஆட்சிலேயே பாபிலோன் வீழ்த்து மேதியா பெர்சியா ஆட்சிக்கு வந்தது (5:30-31).

ஆ. பெல்ஷாத்சார் எப்படி தேவனை அசட்டைபண்ணினான்? (வ 2-4)

1. எருசலேம் தேவலாயத்திலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த பொன், வெள்ளி பாத்திரங்களில், ராஜாவும், பிரபுக்களும், மனைவிகளும், வைப்பாட்டிகளும் குடித்தார்கள் (வ 2,3).
2. விக்கிரக்களை புகழ்ந்தார்கள் ( வ4)
    a. தேவனை எரிச்சல்ப்படுத்தும் காரியம் ( உபா 4:23,24)
    b. கிறிஸ்தவர்களாகிய நாம் விக்கிரகங்களுக்கு விழகி ஓட வேண்டும் ( 1 கொரி 10:14; 1 யோவா 5:21)

### II. சுவரில் எழுதப்பட்ட வார்த்தைகள் (5:5-10)

அ. சுவற்றில் எழுதப்பட்ட கையுறுப்பை பார்த்து ராஜா பயப்படுதல் ( வ5,6)

ஆ. ராஜா ஜோசியரையும், கல்தேயர்களையும், குறி சொல்லுகிறவர்களையும் அழைத்து வருதல் (வ 7)

இ. அந்த எழுத்தை வாசித்து, அர்த்தம் சொல்லுகிறவன் உயர்த்தப்படுதல் (வ 7)

III. எழுத்தை வாசிக்கவும், அதின் அர்த்தத்தை சோல்லவும் தானியேலை அழைத்தல் (5:10-17).

அ. ராஜாத்தி ராஜாவிடம் தானியேலை பற்றி கூறுதல் (வ10-12)

1. தானியேலிடமிருந்த விசேஷித்த அறிவும், புத்தி, தேவனுடைய ஆவி (வ 11, 12, 14)
2. தானியேல் இந்த காலகட்டத்தில் மிகவும் வயதானவனாக இருந்தான்

ஆ. தானியேல் ராஜாவின் பரிசை தள்ளுதல் ( வ 12 -17)

1. இராஜ்யத்தில் மூன்றாம் அதிபதி ( வ16)
    a. நபோனிதாஸ்
    b. பெல்ஷாத்சார்
    c. தானியேல்

VI. தானியேல் ராஜாவுக்கு அர்த்தம் சொல்லுதலும், ராஜாவின் தவறை உணர்த்துவதும் (5:18-31)

அ. ராஜாவின் தவறை உணர்த்துதல் (வ 19- 23)

1. பெல்ஷாத்சாருக்கு நெபுகாத்நேச்சரின் வாழ்க்கை ஞாபகப்படுத்துதல் (வ 19-21)
2. பெல்ஷாத்சார் தேவனுக்கு விரோதமாக உயர்த்தினதை தானியேல் சுட்டி காண்பிக்கிறார் ( வ23)
3. நம்முடைய சுவாசம் தேவனுடைய கையிலிருக்கிறது (வ 23)
    a. சுவாசத்தை வாங்குபவர் அவர், கொடுப்பவர் அவர் ( சங் 104:29,30)
    b. நம்மில் இருப்பது தேவனுடைய சுவாசம் (யோபு 32:8)
    c. ஆவியை விடாதிருக்க நமக்கு அதிகாரம் இல்லை ( பிர 8:8)

ஆ. சுவற்றில் எழுதப்பட்ட வார்த்தை (வ 25)

1. மெனே, மெனே தெக்கேல் உப்பார்சின், அதின் அர்த்தம் (வ 26 -27)
    a. பாபிலோன் வீழ்ச்சியடைந்து, மேதியா பெர்சிய இராஜ்யம் எழுச்சியடையும் ( வ28; தானி 2:39)
    b. பெல்ஷாத்சார் இராத்திரியிலே கொலை செய்யப்பட்டான் (வ 30)
        i. பாபிலோனின் ஆட்சியில் பெல்ஷாத்சரே கடைசி ராஜா
        ii. இதற்கு பின்பு தரியு ராஜாவாக மாறுதல்

Some historical background:

Historical records tell of the fall of babylon by thw medo – persian army the euphrates river ran through the midst of the city, flowing under the high wall, it recorded that the persians da,,ed up the river, diverting it through vhannel they dug, during the hight of the wild party is when they diverted the river. Then soildiers entered the city under the wall through the empty river channel.

கோரேஸ் ஐபிராத்து நதியின் தண்ணீரை திருப்பிவிட்டு, உலர்ந்த தரை வழியாய் பட்டணத்திற்குள் நுழைந்து பட்டணத்தை மேற்கொண்டான். இந்த நேரத்தில்தான் பெல்ஷாத்சார் விருந்து பண்ணி, களியாட்டில்

# அதிகாரம் 6

## தேவனே ஜீவனுள்ளவர், தப்புவிக்க வல்லமையுள்ளவர்

### I. தரியு அதிபதிகளை ஏற்ப்படுத்தல் ( 6:1-3)

அ. "தரியு" (வ 1) – மேதியன் (5:31); மேதியனாகிய திருய தன்னுடைய அறுபத்திரண்டாம் வயதில் இராஜ்யத்தைக் கட்டிக்கொண்டான். (5:32)

ஆ. 120 தேசாதிபதிகளை ஏற்ப்படுத்தினான்; இவர்கள் கணக்கு ஒப்புவிக்கிறதற்கு இவர்களுக்கு மேலாக மூன்று பிரதானிகளை ஏற்ப்படுத்தினான் ( வ1,2)

இ. தரியு தானியேலை உயர்த்தினான் (வ 3) – தானியேலை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான்.

### II. தானியேலைப் குற்றப்படுத்தும் படி முயற்ச்சி செய்தல் (6:4-9)

அ. "தானியேல் உண்மையுள்ளவனாயிருந்தான்" (வ 4)

1. குற்றத்தை கண்டு பிடிக்க முடியவில்லை (எசே 14:14)
2. இன்று நாம் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (வெளி 2:10)

ஆ. ராஜாவாகிய தரியுவின் மதியீனம் ( வ5 -9)

1. விசாரிக்காமல் கையெழுத்து வைத்தான் ( வ9)
2. மாறாத பிரமாணத்தின் படி கட்டளையிட வேண்டும் ( வ8)
3. இராஜா தவிற வேறே யாரிடம் யாதொரு காரியத்தை குறித்து விண்ணப்பம் பண்ண கூடாது ( வ7)
4. அப்படி செய்தால் சிங்ககெபியில் போடப்பட கடவர்கள் ( வ 7)

### III. தானியேலின் விசுவாசமும், தேவன் அவனை தப்புவித்தலும் ( 6:10-28)

அ. தானியேலின் தைரியம் ( வ10)

1. பார்க்கவும் (பிலி 1:27; எபி 10:35)
2. பின்வாங்க கூடாது (எபி 10:38)
3. பேதுருவும், யோவானும் (அப் 4:19; அப் 5:29)
4. சாகப்போகிற மனிதனுக்கு பயப்பட வேண்டாம் (எசா 51:12); எல்லாருடைய சுவாசத்தையும் தன்னிடத்தில் வைத்திருக்கிறவருக்கு பயப்பட வேண்டும்.
5. ஜெபம் செய்தல் 1 இராஜா 8:48 ; மூன்று வேளை, எருசலேமுக்கு நேராக

ஆ. தானியேலின் விசுவாசம் ( வ 11- 24)

1. ராஜா தானியேலை தப்புவிக்க முயற்சி செய்தல் ( வ14)
2. ராஜா தானியேலுக்காக கவலைப்படுதல் ( வ16-18)
3. தேவன் தானியேலை பாதுகாத்தல் ( வ20 – 23)
    a. இடைவிடாமல் ஆராதிக்கிற (வ 20) – விண்ணப்பம் பண்ணுகிற ( வ10)
    b. தப்புவிக்க வல்லவர் ( வ20) –
        i. தரியுவினால் தப்புவிக்க முடியவில்லை ( வ14, 18)
        ii. தேவனே தப்புவிக்க வல்லவர் (3:17)
        iii. தேவன் தன்னைடய தூதனை அனிப்பு பாதுகாத்தல் ( வ22; சங் 91:11,12)
4. தானியேலை குற்றஞ்சாற்றின மனிதர்களின் குடும்பமும் அழிக்கப்படுதல் ( வ24)

இ. தரியு தேசத்திலிருக்கும் எல்லாருக்கும் எழுதுவது (வ 25-28)

1. தானியேலின் தேவனுக்கு முன்பாக பயப்பட வேண்டும் (வ 26)
2. தரியு தேவனை அறிந்துக்கொள்வது ( வ26, 27)
3. தானியேலின் காரியம் ஜெயமாக இருந்தது ( வ28)
    a. மூன்று பிரதானிகளின் ஒருவனாக, தானியேல் இருந்தான் ( வ2)
    b. ராஜா ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்ப்படுத்த நினைத்தான் ( வ3)
    c. ராஜா தானியேலை நேசித்தான், காப்பற்ற நினைத்தான் ( வ14 – 18)
    d. தேவன் தானியேலுக்கு துணை நின்றார் ( வ22)

# அதிகாரம் 7

## நீண்ட ஆயுசுள்ளவர்

### I. தானியேலுக்கு உண்டாட தரிசணம் ( 7:1-12)

அ. “ராஜாவாகிய பெல்ஷாத்சாரின் முதலாம் வருஷத்திலே” ( வ1)

1. இந்த அதிகாரம் வரிசை கிரமப்படி அதிகாரம் 5 முன்பு இருக்க வேண்டும், பாபிலோன் ராஜாவாகிய நெபுகாத்தேச்சரின் மரணத்திற்கு பின்பு நடந்து சம்பவங்களாய் இது இருக்கிறது.
2. பெல்ஷாத்சார் என்பவன் நெபுகாத்நேச்சரின் சந்ததியில் வந்தவன், அவனுடைய பேரனாக இருந்தான் ( தானி 5:18)

ஆ. சொப்பனத்தை கண்டான் (வ 1)

1. தேவன் வெளிப்படுத்துகிறார் ( தானி 2:28; யோபு 33:15-17)
2. காரியங்களின் தொகையை விவரித்தான் ( வ1)
   a. Symbolic language – குறியீட்டு மொழி, அடையாள மொழியில் விவரிக்கப்படுகிறது.

இ. சமுத்திரத்திலிருந்து எழும்பின பெரிய மிருகங்கள் ( வ 2-12):

1. “சமுத்திரம்” ( வ3) – ஏசா 17:12,13 = “அடையாள மொழி” = பூமியை குறிக்கிறதாக இருக்கலாம் (வ 23; வெளி 17:12,13)
2. மிருகங்கள் – ராஜாக்கள் ( வ17; தானி 2:38-43)
3. முந்தினது சிங்கத்தைப்போல இருந்தது ( வ4) = பாபிலோன் (நெபுகாத்நேச்சர்)
   a. சிங்கம் <u>போல </u>(உண்மையான சிங்கம் அல்ல அடையாள மோழி எரே 50:17)- வல்லமை, பயங்கரமான (எரே 4:7; ஓசி 13:8)
   b. கழுகின் செட்டை – வேகமாக பிடித்துக்கொள்ளுதல் (உபா 28:50) பாபிலோன் (எசே 17:3,12)
   c. “இறகுகள் பிடுங்கப்பட்டது” – தாழ்ந்தப்படுதல், நெபுகாத்நேச்சர் மனுஷரிடத்திலிருந்த தள்ளப்பட்டாள் ( 4:32,33)
   d. மனுஷ இருதயம் அதற்கு கொடுக்கப்பட்டது – நெபுகாத் நேச்சர் உணர்ந்துக்கொள்ளுதல்
   e. பாபிலோன் புதை பொருள் ஆராய்சியில் இறக்கையுடன் கூடிய சிங்க உருவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

4. கரடிக்கு ஒப்பாகிய ( வ 5) – பெர்சியா
    a. பின்பு – இந்த மிருகங்கள் ஒரே நேரத்தில் எழும்பாமல்; ஒன்றுக்கு பின் ஒன்று எழும்புகின்றன.
    b. பெர்சியாவில் கரடிகள் மிக அதிகமாக இருந்தன.
    c. "ஒருபக்கம் சாய்ந்து நின்று" – மேதியாவை விட பெர்சியா வழுவாக இருந்தது.
    d. "விலா எலும்புகளை கவ்விக்கொண்டிருந்தது" – பல நாடுகளை வெற்றிக்கொண்டது.
    e. எழுந்து வெகு மாம்சம்தின் – மேலும் பல நாடுகள் வெற்றிக்கொள்
5. அதின் பின்பு, சிவிங்கியைப் போல (வ 6) = கிரேக்க ராஜ்யத்தின் , அலேக்ஸாத்தரை குறிக்கிறது.
    a. நாலு செட்டைகள் – தீவிரம் (2: 39)
    b. 4 தலைகள் – அவனுக்கு ( அலேக்சாந்தருக்கு) பின் கிரேக்க வல்லரசில் தோன்றிய நான்கு பிரிவு ஆட்சியை குறிக்கிறது.
6. கெடியும் பயங்பரமுமான மிருகம் (வ 7) = ரோம ராஜ்யம்
    a. மகா பலத்ததுமாயிருந்தது
    b. பெரிய இருப்புப்பற்கள் – தானி 2:40 = சிலையின் கால்கள் இரும்ப்போல இருந்ததாக கூறப்படுகிறது.
    c. மிருகங்களைப் பார்க்கிலும் வேற்றுருவமியாரிந்தது – இரும்பும், களிமண்ணும் ( தானி 2:40)
    d. நொறுக்கி பட்சித்து, மிதித்துப்போட்டது = நொறுக்கித் தகரத்துப்போடும்
    e. 10 கொம்புகள் – பத்து ராஜாக்கள் ( வ24)
    f. சின்ன கொம்பு – வேறொரு ராஜா ( வ24)
7. நாண்ட ஆயுசுள்ளவரின் ( தேவன் ) நியாயத்தீர்ப்பு தானியேல் பார்த்தார் ( வ 9-12)
    a. சிங்காசனம் – நியாயத்தீரப்பு , ராஜா (எபி 1:8); ஒபதி 1:21; வெளி 20:11,12); ஆளுகை (அப் 2:33; 1 பேது 3:22; எபே 1:20-23)
    b. வஸ்திரம் – உறைந்த மழை
    c. சிரசின் மயிர் – வெண்மை, பஞ்சைப்போல துப்புரவாகவும்
    d. சிங்காசனம் அக்கினி ஜீவாலை, சக்கரம் எரிகிற நெருப்பு ( வ9)
    e. ஆயிரமாயிரம் பேர் அவரை சேவித்தார்கள்

f. கோடாகோடி பேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்
g. நியாயசங்கம் உட்கார்ந்தது
h. புஸ்தகங்கள் திறக்கப்பட்டது – வெளி 20:12-13
i. உடல் அழிக்கப்பட்டு, எரிகிற அக்கினிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது (வ 11)
    i. உதாரணம்: பெல்ஷாத்சார் ( 5:27)

**II. நான்கு மிருகங்களை பற்றி விளக்கம் ( 7:13-22)**

அ. மனுஷ குமாரன் .... நீண்ட ஆயிசுள்ளவரிடம் இடம் வருதல் (வ 13)

a. மனுச குமாரனுடைய சாயாலான ஒருவர் – கிறிஸ்து
b. வானத்து மேகங்களுடன் வந்தார் (வ 13; அப் 1:9-11; அப் 7:5)
c. சமீபத்தில் கொண்டுவரப்பட்டார் ( 1 பேது 3:22; எபே 1:20-23)
d. மனுசகுமாரனை சேவிக்கும்படி ( வ14, வெளி 5:12)
    a. கர்த்தத்துவமும்
    b. மகிமையும்
    c. ராஜரீகம் கொடுக்கப்பட்டது

ஆ. தானியேல் பொருள் எல்லாவற்றையும் சொல்லும் படி சமீபத்தில் நின்ற ஒருவனிடத்தில் வேண்டிக்கொள்ளுதலும், அதின் விளக்கம் சொல்லப்படுதல் ( 7:15-28)

1. சமீபத்தில் நிற்கிறவர்களில் ஒருவனிடத்தில் நான் போய் ( வ16) – யோவானுக்கு நடத்ததுப்போல (வெளி 6:1; வெளி 22:8)
2. நாலு பெரிய மிருகங்கள் = பூமியிலிருந்து எழும்புகிற நாலு ராஜாக்கள்
    a. சிங்கம் – நெபுகாத்நேச்சர் ( வ4)
    b. கரடி – பெர்சியா
    c. சிவிங்கி – அலேசந்தார் (கிரேக்கு) ( வ6)
    d. கெடியும் பயங்கரமுமான மிருகம் – ரோம ராஜ்யம் ( வ7)
3. ராஜ்யத்தை சுதந்திரித்துக்கொள்வார்கள் ( வ18) – தேவனுடைய பிள்ளைகளின் வெற்றி
4. நாலாம் மிருகத்தை பற்றி விளக்கம் மற்றும் சின்ன கொம்பை பற்றி விளக்கம் (வ19 -28)
    a. தானியேல் அந்த நாலாம் மிருகத்தை பற்றி விளக்கத்தையும், சின்ன கொம்பை பற்றி விளக்கத்தை அறிய மனதாயிருத்தல். ( வ 19,20)

b. காலம் வருமட்டாகவும் ( 21) -காலக்கெடு
    i. நீண்ட ஆயுசுள்ளவர் வருமட்டாகவும்
    ii. பரிசுத்தவான்கள் ராஜய்த்தை சுதந்தரித்துக்கொள்ளும் காலம் வருமட்டாகவும்.
c. “இந்த கொம்பு” ( வ 22)
    i. வெஸ்பேசியன் – ரோம ராஜா யூதர்களை துன்படுத்தினான் ( கி.பி 69 -79) (அ)
    ii. டோமோசியன் – ரோம ராஜா கிறிஸ்தவர்களை துன்ப்பபடுத்தினான் (கி.பி 81-96) (அ)
    iii. அல்லது போப்பாக இருக்கலாம்
d. பரிசுத்தவான்கள் ( வ22) – தேவனுடைய பிள்ளைகளை, அந்த கொம்பு துன்ப்ப்படுத்துகிறது (வெளி 13:1-8)
e. பத்துக்கொம்புகள் – அந்த ராஹ்யத்தில் எழும்பும் பத்து ராஜாக்கள்
    i. ரோம ராஜ்யத்தில் எழும்பும் பத்து ராஜாக்கள் ( வ23; 7:7; தானி 2:40-43)
        1. அகஸ்துராயன் ( கி.மு 27 – 14 கி.பி) – கிறிஸ்துவின் பிறப்பு (லூக் 2:1)
        2. திபேரியுராயன் (கி.பி 14 – 37 கி.மு) – கிறிஸ்துவின் சிலுவை (லூக் 3:1)
        3. கலிக்குலா (கி.பி 37 – கி.பி 41 கி.பி)
        4. கிலவுதிராயன் ( கிபி 41- 54) -யுதரை ரோமைவிட்டு வெளியேற செல்லுதல் ( அப் 18:2; அப் 11:26)
        5. நீரோ (கி.பி 54 – 68) – தேவனுடைய பிள்ளைகளை உபத்திரவப்படுத்தினவன், பவுல், பேதுருவை கொலை செய்தவன்.
        6. கல்பா (கி.பி 68 – 69)
        7. ஒத்தோ (கி.பி 69 – 70)
        8. விட்டிலயஸ் (கி.பி 69-70)
        9. வெஸ்பேசியன் (கி.பி 69-79) – எருசலேமை தாக்கியது,
        10. தீத்துராயன் (கி.பி 79-81)
        11. டோமிசியன் (கி.பி 81-96)- கிறிஸ்தவர்களை துன்ப்படுத்தினவன்.
f. வேறொருவன் எழும்புவான் (வ 24) – சின்ன கொம்பு (வ 22)

i. முத்தினவர்களைப்பார்க்கிலும் வேறாயிருந்து, மூன்று ராஜாக்களை தாழ்த்திப்போடுவான் (வ 24)
ii. உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளை பேசி, பரிசுத்தவான்களை ஒடுக்குவான்.
iii. காலங்களையும், பிரமாணங்களை மாற்ற நினைப்பான்
iv. ஒருக்காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லும் மட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள் ( வ25; 2 தெச 2:3-7)
    1. குறிப்பிட்ட காலம், காலங்கெடு
    2. வெளி 2:10
v. நியாயசங்கம் உட்காரும் ( வ26) – நியாயத்தீர்ப்பு (வெளி 16:5-7; தானி 5:27)
vi. தேவனுடைய பிள்ளைகளில் வெற்றியும், தேவனுடைய ராஜய்த்தின் வெற்றியும் ( வ27; ரோம 14:10-12)

g. தானியேல் இந்த காரியங்களை மனதிலே வைத்துக்கொண்டான் ( வ28)

# அதிகாரம் 8

## ஆட்டுக்கடாவும், வெள்ளாட்டுக்கடாவும்

**I. தானியேல் ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடாவின் தரிசனத்தை பார்த்தல்: (8:114)**

அ. "மூன்றாம் வருஷத்திலே வேறொரு தரிசனம் எனக்கு காண்பிக்கப்பட்டது" (வ 1)

1. முதல் தரிசனத்திலிருந்து 2 ஆண்டுகளுக்கு பின்பாப இந்த தரிசனத்தை பார்த்தார் ( 7:1)
2. தானியேல் 5 அதிகாரத்திற்கு முன்பாப நடத்த சம்பவங்கள்

ஆ. "சூசான் அரமனையில் இருந்தேன்" (வ 2)

1. "ஏலாம் தேசத்திலுள்ள" பாபிலோனிலிருந்து 200 மேல் தொலைவில் இருந்தது.
2. "ஊலாய் ஆற்றங்கரை" – ஐபிராத்து , இதேக்கேல் ந்திகளுக்கு இடையில் ஓடிய ஆறு.

இ. இரண்டு கொம்புகளுள்ள ஒரு ஆட்டுக்கடா ( வ3-4)

1. இரண்டு கொம்புகள் ( வ4) – மேதியா, பெர்சியா தேசங்களின் இராஜாக்கள் ( வ 20)
2. ஒரு கொம்பு மற்றதை பார்க்கிலும் உயர்ந்திருந்தது – கோரேஸ் ( 2 நாள 34:22); பார்க்கவும் ( 7:5)
3. அந்த ஆட்டுகடா மேற்கும், வடக்கும், தெற்கும் பாய்கிறதை கண்டேன் ( வ 4)
    a. கிழக்கில் போகவில்லை
    b. வெற்றிப்பெற்ற இடங்கள்
    c. 7:5 -யில் கரடியானது 3 விலா எழும்புகளை கவ்விக்கொண்டிருந்தது.

ஈ. வெள்ளாட்டுக்கடா, ஆட்டுக்கடாவை மேற்க்கொள்ளுதல் ( வ 5 – 15)

1. வெள்ளாட்டுக்கடாவின் எழுச்சி ( வ5 -8)
    a. மேற்கேயிருந்து வந்தது ( வ5) – கிரேக்கு மற்றும் மக்கதோனியா (8:24)
    b. நிலத்தில் கால்பாவாமல்- வேகமான செயல் ( 7:6)
    c. கண்களுக்கு நடுவே விசேஷித்த ஒரு கொம்பு ( வ25)
        i. முதலாம் ராஜா ( வ21)
            1. அலெக்ஸாந்தார் (கி.மு 331- 323)

d. வெள்ளாட்டுக்கடா; இரண்டு கொம்புகள் உள்ள ஆட்டுக்கடாவை மேற்க்கொள்ளுதல் ( வ 6 – 7)
    i. அலேக்ஸாத்தார் மேதிய பெர்சியாவை மேற்க்கொள்ளுதல்.
e. வெள்ளாட்டுக்கடா மிகுதியும் வல்லமை கொண்டது ( வ8)
    i. தானி 2:39
    ii. அது பலங்கொண்டிருக்கையில்
        1. அலெக்ஸாந்தார் மிக குறுகிய காலத்தில் அநேக இராஜ்யங்களை கை பற்றியிருந்தான். இவருடைய வெற்றியின் நிமித்தம் மகா அலேக்ஸந்தார் என்கிற பெயர் கொடுக்கப்பட்டது, பெர்சியா முழுவதையும் அழித்துப்போட்டான்.
f. அந்த பெரிய கொம்பு முறிந்துப்போயிற்று ( வ 7)
    i. அலெக்ஸாந்தரின் மரணம்
    ii. 32 வயதில் பாபிலோனில் சரீர பலவீனத்தினத்தால் மரணமடைந்தான்.

2. சின்ன கொம்பு ( வ9-15)
    a. அதற்கு பதிலாக விசேஷித்த நாஆலு கொம்புகள் முளைத்தெழும்பினது (8)
        i. அலேக்ஸாந்தரின் சாம்ராஜ்யம் நான்கு பாகங்களாய் பிரிக்கப்பட்டது. ( வ22)
    b. “சின்னதான ஒரு கொம்பு புறப்பட்டு” ( வ9) – அந்திகஸ் எபிபானஸ் கி.பி 175-164)
        i. தெற்குக்கும், கிழக்குக்கும் எதிராகவும், சிங்காரமான தேசத்துக்கு நேராகவும் மிகவும் பெரியதாயிற்று.
        ii. நட்சத்திரங்களில் சிலவற்றைப் பூமியில் விழப்பண்ணி, அவைகளை மிதித்தது ( வ10) – தேவனுடைய மக்கள் உபத்திரவம் (தானி 12:3; ஆதி 22:17; வெளி 12:1-4)
        iii. தன்னை உயர்த்தி – அன்றாற பலியை நீக்கிற்று.
            1. யூதர்களின் பலியை தீக்கினான்
        iv. பாதகத்தினிமித்தம்.... ஒப்புக்கொடுக்கப்பட்டது, சத்தியத்தை தரையில் தள்ளிற்று ( 12)
    c. பரிசுத்தவானாகிய ஒருவன் பேசக்கேட்டேன் ( வ13,14)
        i. அன்றாட பலியைக் குறித்தும், பாழக்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தை குறித்தும், பரிசுத்த ஸ்தலமும் சேனையும் மிதிபட

ஒப்புக்கொடுக்கப்படுவதையும் குறித்தும், காலத்தை கேட்டு விசாரித்தல் (வ 13) – உபத்திரவ காலத்தை குறிக்கிறது

1. 2300 இராப்பாகல் – 3 ½ வருடம்

**II. காபிரியேல தரிசனத்தை தானியேலுக்கு விளக்கப்பண்ணுதல் ( 8:15 -27)**

அ. மனுஷ சாயலான ஒருவன் ( வ 15-18)

1. காபிரியேல் -லூக் 1:19
    a. செய்தியை கொண்டுவருபவன் (9:21,22)
2. தரினத்தை விளங்கப்படண்ணுதல் ( வ17 -22)

ஆ. சின்ன கொம்பை பற்றி விளக்கம் ( வ23 -26)

1. ராஜாவைப்பற்றி விவரிப்பு, அழிவு ( வ24,25)

இ. இதற்கு இன்னும் அநேகநாள் செல்லும் (வ 26)

1. சீக்கிரத்தில் நடக்கிறவை அல்ல

ஈ. தானியேலின் பலவீனம், தரிசனத்தை ஒருவரிடம் சொல்லவில்லை.

## அதிகாரம் 9

## பிரபுவாகிய மேசியா

வாசிக்க வேண்டிய பகுதிகள்: எரேமியா 25:8-12; 2 நாள 36:20-23; எஸ்றா 1:1-8

**I. தானியேலின் ஜெபம்(9:1-20)**

அ. தரியு” ( வ1)

1. முதாலம் வருஷம் – பாபிலோன் வீழ்ச்சிக்கு பின் (எரே 25:11,12)
2. ஆகஸ்வேருவின் புத்திரன் – அகாஸ்வேரின் சந்ததியில் வந்தவன் (எஸ்1:1,2)

ஆ. எரேமியா, புஸ்தகங்களால் அறிந்துக்கொண்டான் ( வ2)

1. எரேமியாவின் மூலம் தேவன் கூறின வார்த்தைகள் ( 2 நாள 36:20-23; எரே 25:8-12)
2. வேதத்தை வாசிப்பதன் மூலமாய் ஞானத்தை அறிந்துக்கொள்ளலாம் ( 2 இரா22 8-20; 23:1-3; எபே 3:3-6)

இ. தானியேல் ஜெபத்தினாலும், விண்ணபங்களினாலும் தேவனை தேடுதல் ( வ 3- 20)

1. தானியேல் தங்கள் மீது வந்த துன்பத்திற்கு, உபத்திரவத்திற்கு காரணம் தாங்கள் செய்த பாவமும், தூரோகமும் என்பதை அறிக்கையிடுதல் ( வ 4-7)
    a. பார்க்கவும் (உபா 28:14-16; 50-53)
2. தேவனிடம் மன்னிப்பை வேண்டுதல் ( வ 10 – 20)

**II. காபிரியேல் புறப்பட்டு வருதலும், மேசியா பற்றி கூறுதலும் ( 9:21-27)**

அ. தானியேல் ஜெபவீரனாக இருந்தான் ( வ21, தானி 6:10)

ஆ. காபிரியேல் ( வ 1)

1. இது இரண்டாவது முறை (தானி 8:15,16)
2. அறிவை உணர்த்தும் படியாக வந்தான் ( வ22)
3. கட்டளை அறிவிக்கவந்தான் ( வ 23)

இ. பிரபுவாகிய மேசியா ( வ 24 -27)

1. எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிகிறது ( 24)
    a. மீறுதலை தவிர்க்கிறதற்கும்
    b. பாவங்களை தொலைக்கிறதற்கும்

    c. அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும்
    d. நீத்திய நீதியை வருவிக்கிறதற்கும்
    e. தரிசனத்தையும், தீர்க்கதரினத்தையும் முத்திரிக்கிறதற்கும்
    f. மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும்
2. பிரபுவாகிய "மேசியா" ( வ25 = யோவா 1:41; யோவா 4:25)
    a. எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக்கட்டிகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல்
        i. கோரேஸ் (எஸ்றா 1:1-3)
        ii. அர்தசஷ்டா எஸ்ராவுக்கும், நெகேமியாவுக்கும் கட்டளையிடுதல் (எஸ்றா 7:12-20; நெகே 2:6-12)
        iii. தரியு (எஸ்றா 6)
    b. பிரபுவாகிய மேசியா வருமட்டும்
        i. 7 வாரம்
        ii. 62 வாரம்
    c. 62 வாரங்களுக்கு பின் ( வ26)
        i. மேசியா சங்கரிக்கப்படுவார்
            1. தமக்காக அல்ல ( 1 யோவா 4:14; 1 யோவா 2:2)
        ii. பரிசுத்த ஸ்தலத்தை வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழிந்துப்போடுவார்கள் ( வ6)
    d. ஒரு வாரம், வாரம் பாதி ( வ 27)
        i. உடன்படிக்கை உறுதிபடுத்துவர் ( எபி 10:9,10)
        ii. பலியையும், காணிக்கைகளையும், ஒழியப்பண்ணுவார் ( எபே 2:15)

# அதிகாரம் 10

## I. தானியேலுக்கு வெளியாக்கப்பட்ட தரிசனம் ( 10:1-21)

அ. கோரேஸ் அரசாண்ட மூன்றாம் வருஷம் ( வ1 -4)

1. யூதர்கள் எருசலேமுக்கு திரும்பிய பின் தானியேல் கண்ட தரிசனம் (எஸ் 1:1-4)
2. தானியேல் 90 -93 வயதுடையவனாய் இருக்கலாம்.

ஆ. தானியேலின் துக்கம் ( வ2,3)

இ. மகிமையின் தரிசனம் ( வ5 -9) – இந்த பகுதி வெளி 1:12-15 -இல் உள்ளது போல இருக்கிறது.

1. தானியேல் கண்ட புருஷன்
   a. இதெக்கேல் என்னும் பெரிய ஆற்றங்கரை (வ 4; ஆதி 2:14)
   b. சணல் வஸ்திரந்தரித்து
   c. அரையில் ஊப்பாசின் தங்கக்கச்சையைக் கட்டிக்கொண்டிருக்கிற ( வ5)
   d. சரீரம் படிகப்பச்சை போலவும் (வ 6)
   e. முகம் மின்னலின் பிரகாசத்தைப் போலவும் (வ 6)
   f. கண்கள் எரிகிற தீபங்கள் போலவும் (வ 6)
   g. புயங்கள், துலகப்பட்ட வெண்கல நிறத்தைப்போலவும் ( வ6)
   h. தானியேல் மாத்திரம் அந்த தரிசனத்தை பார்த்தல் ( வ7)
   i. அவருடைய சத்தத்தை கேட்டேன், முகங்கவிழ்ந்து நித்திரை போகிறவனாய் தரையிலே முகங்குப்புற விழுந்துகிடந்தேன் ( வ9; வெளி 1:17)

ஈ. தூதன் கூறிய செய்தி ( 10:10-21)

1. தூதன் தானியேலை தூக்கி வைத்து ( வ10)
2. தானியேலும், தூதனும் ( வ11 – 12)- தூதன் வந்ததின் நோக்கம்
3. தடை ஏற்ப்பட காரணம்
   a. என்னோடு எதிர்த்து நின்றான் (வ 13)
      i. அதிபதி ( வ13) – பிரபு ( 20) – பெர்சியாவின்- மனிதனால் தேவதூதனாய் தடுக்க முடியுமா? இது போல்லாத ஆவியை குறிக்கலாம்.

b. 21 நாட்கள் எதர்த்து நின்றான் – 2 வாரம், தானியேல் துக்க நாட்கள் (10:2)
c. உதவிக்கு வந்த பிரதான அதிபதியாகிய மிகாவேல் ( யுதா 9)

4. தானியேலை பலப்படுத்தல் ( வ15 -21)
   a. திடன் கொள்ளப்பட்ட தானியேல்
   b. கிரேக்கு தேசத்தின் அதிபதி ( வ20)
   c. பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம் (வ 20)

# அதிகாரம் 11

## I. பெர்சியாவின் ஆளுகை ( 11:1-2)

அ. மேதியனாகிய தரிய அரசாண்ட முதலாம் வருசம் ( வ1)

1. பத்தாம் அதிகாரத்தின் தொடர்ச்சி ( வ 21)
2. எட்டாம் அதிகாரத்தின் சொல்லப்பட்டவைகளின் விளக்கங்கள் அநேகவற்றை நாம் பார்க்கலாம்.
3. மேதியனாகிய தரியுவுக்கு துணை நின்றேன் ( வ1)
    a. தூதன் ( 10:21) – தொடர்ந்து பேசுகிறான்
    b. பெர்சியாவின் பிரபுவோடு யுத்தம் (11:20)
4. பெர்சியாவில் எழும்பும் மூன்று இராஜாக்கள்
    a. கேம்பிஸஸ்
        i. கோரேஸின் மகன் ( 530 – 522 கி.மு)
        ii. BARDIYA (OR) SLEMERDIA
            1. கோரேஸின் மகன் ( 522
        iii. தரியு ( கி.மு 522 -486)
            1. கோரேஸின் மகளை திருமணம் செய்திருந்தான்
        iv. நாலாம் ராஜா – அகாஸ்வேரு (எஸ் 1:1)
            1. கி.பி 486 -465
            2. எல்லாரிலும் மகா ஐசுவரிய சம்பன்னனாகி
            3. கிரேக்கு ராஜ்யத்துக்கு விரோதமாகச் சகலரையும் எழும்பி விடுவான் (வ 2).

## II. கிரேக்கு தேசத்தின் ஆளுகை (11:3-35)

அ. “பராக்கிரமமுள்ள ஒரு ராஜா எழுப்பி” (வ 3)

1. மகா அலேக்ஸாந்தார் ( 3; 8:8,21) (கி.மு 331-323)
2. பிரபலமாய் ஆண்டு
3. கிரேக்கு தேசத்தின் முதல் இராஜாவாகவும், அநேக இராஜ்யங்களை, குறைந்த நேரத்தில் வெற்றி பெற்றான்

ஆ. நாலு திசைகளிலும் பகுக்கப்படும் ( வ4)

1. அலேக்ஸாந்தரின் ராஜ்யத்திற்கு பிறகு அவனுடைய ராஜ்யம் நான்காக உண்டாக்கப்பட்டது (8:8,22)

2. அவனுடைய ராஜ்யம் பிடுங்கப்பட்டு, அவனுடையவர்களல்லாத வேறேபேர்களிடமாய்த் தாண்டிப்பேன்.
    a. அலேக்ஸாத்தரின் குடும்பம் அழிவு
    b. இதைத்தொடர்ந்து மூன்றாம் அந்திகஸ் (வடதிசை) படையெழுந்து தன் அரண்மனைக்குத் திரும்பினான் ( வ 10), அப்பொழுது நாலாம் (தென்திசை) படையெடுத்துப்போய் மூன்றாம் அந்திகஸ் (வடதிசை) ரபியா என்னும் இடத்தில் மிகுந்த பொருள் நஷ்டத்துடன் வெற்றிக்கொண்டான், இது எகிப்துக்கு அருகிலே கி.மி 217 -ல் நடந்தது.
3. முந்தின சேனையிலும், பெரிதான சேனையைச் சேர்ந்து ( 13-15)
    a. மூன்றாம் அந்திகாஷ் (வடதிசை) 14 ஆண்டுகளுக்கு பின்பு எகிப்துக்கு விரோதமாக பெரும் திராளன வீரர்களோடு யுத்தம்செய்தனர், யூதர்கள் அந்திகஸ்ஸிற்கு துணைநின்றான்.
    b. வடதிசை இராஜா வெற்றி கொள்வான் ( வ15,16)
4. கண்ணிப்பெண்ணை கடுப்பான் ( வ17) – கிளியோபாட்ரா ( NOT FAMOUS)
    a. எதிரியை உறவாடிக்கெடுக்கும் முகாந்திரம் தன் மகளை கிளியோபாட்ரா தென்திசை (எகிப்து) ராஜா குமாரனுக்கு ( 5 – தாலமி) கொடுத்தான்.
    b. கிளியோபாட்ரா தன் கணவனின் பக்கம் நின்று, தன் தகப்பனின் திட்டத்தை முறிந்தாள் ( வ17)
5. தீவுகளில், தீவிகளில் யுத்தம் செய்து வெற்றி கண்ட அந்திகஸ், கி.மு 198 மக்னீசியாவில் (சிமிர்னாவிற்கு அருகே ) ரோம தளபதியால் தோல்வி கண்டு, தன் தேசத்திற்கு திரும்பிய பின்பு அங்கு கொல்லப்பட்டான் ( 18-20) அவனுடைய ஸ்நானத்தில் அவன் குமாரன் செலுக்கஸ் ஆட்சிக்கு வந்தான் ( வ20)
6. அவமதிக்கப்பட்டவன் ஒருவன் எழும்புவான் ( வ 21 -26)
    a. அந்திகஸ் எபிபானேஸ் ( கி.பி 175 – 644)
    b. இவன் முறையான இராஜ வம்சத்தானல்ல, சூழ்ச்சியில் ஆட்சிபீடத்தில் அமர்த்தான்.
    c. சூதாய் நடந்து (வ 23) – சூழ்ச்சியில் பல வெற்றிகளை பெற்றான்ஂ.
    d. எகிப்தை வெற்றிக்கொள்ளுதல் ( வ 25-16)
7. பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாக வைத்து ( வ28-45)
    a. மீண்டும் அந்திகஸ் 4 எகிப்து விரோதமாக வரும் போது ரோம அரசினால் தடுக்கப்பட்டான் ( வ29,30)
    b. இந்த தோல்வியின் ஆத்திரத்தால் எருசலேமிலிருந்து யூத முறைகளை கெடுத்தான் ( வ 32 -45)

i. பரிசுத்த ஸ்தலத்தை பரிசுத்தக் குலைச்சாலாக்கி ( வ31)
   1. கி.பி 168 யில் எருசலேமை பிடித்தான்.
ii. அன்றாட பலியை நீக்கி ( வ31) – தானி 8:11
iii. பாழாக்கும் அருவருப்பை அங்கே வைத்தான் ( வ 31)
iv. கள்ள மார்க்கத்தான் ( வ32)
   1. விக்கிரகாரதனை சிலைகளை ஏற்ப்படுத்தினான்
   2. பல யூதர்கள் அவனக்கு உதவி செய்தனர்.
v. 80,000 யூதர்களை கொண்றான், 40,000 அடிமையாக விற்றுப்போற்றான்

c. தேவனுடை பிள்ளைகளின் விசுவாசம் ( வச 34 -39)
   i. புடமிடுகிறதற்கும், சுத்திகரிக்கிறதற்கும், வெள்ளையாக்கிறதற்கும் சிலர் விழுவார்கள்( வ35)
   ii. தனக்கு இஷ்டமானபடி செய்வான்.

d. முடிவு ( வ40-45)
   i. மீண்டும் தென்திசை, வடதிசை ராஜாவும் சண்டையிடுவார்கள் ( வ 40)
   ii. அவனுடைய முடிவு பரிதாபமாக இருக்கும் ( வ 41-45)

# அதிகாரம் 12

## நட்சந்திரங்களைப்போலவும்... பிரகாசிப்பார்கள்

### I. மிகாவேல் ( 12:1-3)

அ. அக்காலத்தில் எழும்புவான் ( வ1)

1. 10 அதி, 11 அதி தொடர்ச்சியாக இருக்கிறது
2. 11:36 -12:13 இரண்டு பிரதான காரியங்கள் பற்றி
    a. அந்திகஸ் தோல்வி மரணம் ( வ 44-45)
    b. பின்பு ரோம ராஜ்யத்தை நோக்கி செல்கிறது.

ஆ, ஆபத்துக்காலம் வரும் ( வ1)

1. அந்திகஸ் 2 எபிபானேஸ் மூலம் வந்த உபத்திரவம் மோசமானதாக இருந்தது, கி.பி 70 -யில் ரோமர்களால் எருசலேம் தேவாலாயம் அழிக்கப்பட்டது, யுத கிறிஸ்தவர்கள் உபத்திரவப்பட்டார்கள் (கி.பி 60 -96) கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த உபத்திரவமிருந்தது.
2. இந்த காலத்தில் மிகாவேல் தூதன் தின்று யுத்தத்தில் ஜெயிக்க கிறிஸ்தவர்களுக்கு பட்சத்தில் எழும்புவான். ( வ1)
3. தேவனுடைய பிள்ளைகளின் விடுதலை ( வ1)

இ. நித்திய ஜீவன், நித்திய நிந்தை ( வ2)

1. தேவனுடைய பிள்ளைகளின் வெற்றி ( 1தெச 4:13-18)

### II. **தானியேலின் முடிவு( 12:4-13)**

அ. புத்தகத்தை முத்திரைபோடு (வ 4)

1. முடிவு காலத்திற்குரியது ( வ9)
    a. பாதுகாப்பு
2. இதினால் அழிவு பெருகும்
3. புதைபொருளாக வைக்கப்பட்டு முத்திரிக்கப்படும், இருக்கும் ( வ9)

ஆ. ஞானவான்கள் உண்ர்த்துகொள்வார்கள் (வெளி 13:18)

இ. காலம் (வ 11,12)

1. 1290 நாட்கள்

2. 1335 நாட்கள்

ஈ. தனியேலின் முடிவு ( வ 13)

1. இளைப்பாறுதல்

## தானியேல் புஸ்தகம் கற்றுக்கொடுக்கும் பாடம்

1. உபத்திரவம், சோதனையிலும், ஜீவனாலும், மரணமானலும், விசுவாசத்தில் உறுதியாக நிற்க வேண்டும், தேவனுக்கு உண்மையாக இருக்க வேண்டும்.
2. தேவனே அந்நிய ராஜாக்களையும், ஜனங்களையும், கொண்டு தன்னுடைய பிள்ளைகளை சீர்ப்படுத்துகிறார், புடமிடுகிறார், தேவனே தன்னுடைய ஜனங்களை பாதுகாக்கிறார் ஒப்புவிக்கிறார் , உயர்த்துகிறார், தேவனே தன்னுடைய சித்ததின்படி எல்லாவற்றையும் செய்கிறார்
3. தேவனுடைய ராஜ்யம் எல்லா இராஜ்யங்களையும் வெற்றிக்கொள்ளும், தேவனே மனுசருடைய இராஜ்யத்தில் ஆளுகை செய்கிறார்.
4. விசுவாச உறுதிக்கான தீர்க்கதரிசன ஆதாரங்கள் (2 பேது 1:19)